a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ஆகஸ்ட் 2016 August | இதழ் 307 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

1991 26th Year 2016



றொறன்ரோவில் யாழ். ஆயர்



ஐஸ்வர்யா தர்ப்பணம்



யாழ். மண்ணில் பண்பாட்டுக் கூடல்



நெருப்பில் உதித்தவள்

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம்-1991

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு
முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

விநியோக இணைப்பாளர்
இ. சிவலிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
என். குமாரதாஸன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிராஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்:
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# கண்களைத் திறவுங்கள்!

கடந்த மாதம் கனடா வந்திருந்த யாழ்ப்பாண ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் தாயக நிலைவரம் தொடர்பான சில முக்கியமான கருத்துகளை நேயம் அமைப்பு இங்கு நடத்திய விசேட நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அதற்கு இரு தினங்களுக்கு முன்னராக பிரித்தானியாவில் வாழும் அக்கறையுள்ள தமிழன்பர் ஒருவர் களத்தின் தற்கால நிகழ்வுகள் தொடர்பான விபரங்களைக் கொண்ட மின்னஞ்சல் ஒன்றினை அனுப்பியிருந்தார்.

ஆயரின் கனடிய உரையும், தமிழன்பரின் மின்னஞ்சல் கருத்தும் எங்கள் மண்ணின் இன்றைய போக்கையும் நோக்கையும் வெவ்வேறு கோணத்தில் - ஆனால் ஒரே தளத்தில் நின்று பார்ப்பவையாக இருப்பதால், அவை பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்து கொள்வது இங்கு அவசியமாகின்றது.

போதைவஸ்துப் பாவனை, வன்செயல், பாலியல் குற்றச்செயல்கள் ஆகிய மூன்றுமே இன்று அங்கு முக்கிய பிரச்சனைகளாக இருப்பதாகக் குறிப்பிட்ட ஆயர் அவர்கள், இளையோரின் நெறிதவறிய நடவடிக்கைகளுக்கும், வன்முறைகளுக்கும் அங்கு நிலவும் வேலையில்லாப் பிரச்சனை பிரதான காரணம் என்றும் குறிப்பிட்டார்.

தாயக மக்களுக்குப் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் வழங்கி வரும் தொடர்ச்சியான உதவிகளை நன்றியுடன் நினைவுகூர்ந்த ஆயர், இளையோரின் வேலையில்லாப் பிரச்சனையை நீக்கவும் புலம்பெயர்ந்தோரே ஏதாவது செய்ய வேண்டுமெனக் கோரினார்.

தாயகத்துக்கு விடுமுறை காலங்களில் உல்லாசப் பயணிகள் போலச் செல்லும் வெளிநாட்டுத் தமிழர் சிலர், அங்குள்ள பளபளப்பான வீதிகளையும் புத்தம்புதிய கட்டிடங்களையும் நவீன விடுதிகளையும் பார்த்துவிட்டு 'அங்கை எல்லாம் அந்த மாதிரி...' என்று விளாசித் தள்ளுவது, 'உள்ளே ஈரும் பேனும்' என்ற உண்மையறியாத கூற்று என்பதை பிரித்தானியாவிலிருந்து வந்த மின்னஞ்சல் தெரிவிக்கிறது.

இலங்கையில் மதுபான விற்பனையில் யாழ்ப்பாணம் முதலிடத்துக்கு வந்துள்ளது. ஆசிரியர்களே மாணவர்கள் மீது பாலியல் வன்புணர்வு மேற்கொள்கின்றனர். வீதிச் சண்டியர்கள் முழுத்துக்கு ஒருவராக நிற்கின்றனர். வாள்வெட்டுகள் நித்திய சூரன்போராகியுள்ளது. குடியும் கூத்தும் கும்மாளமும் அன்றாட தரிசனங்களாகி விட்டன.

தமிழ் மாணவரின் கல்வித்தரம் இறங்குமுகமாகி விட்டது. ஜி.சி.ஈ பரீட்சையில் 35 வீதமானவர்கள் மட்டுமே ஆங்கில பாடத்தில் சித்தியடைந்ததாக புள்ளிவிபரம் கூறுகிறது. பல்கலைக் கழகப் புகுமுக பரீட்சையில் சித்திபெறும் தமிழ் மாணவர் தொகை அருகிச் செல்கிறது. இதனாற்தான் தற்போது யாழ். பல்கலைக் கழகத்தில் 1400 சிங்கள மாணவர் கற்கும் நிலை உருவானது. இப்படியே போகுமானால்.......

தமிழரின் இன்றைய அரசியல் தலைமை இவைகளையிட்டு உடனடிக் கவனம் செலுத்த வேண்டும். காலதாமதம் மிகவும் ஆபத்தானதாகலாம்.

கண்களை மூடிக்கொண்டு பால் குடிக்கும் விடயமல்ல இது!

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

Manager
R. R. Rajkumar

Circulation Coordinator
R. Sivalingam

Public Relation
N. Kumaradasan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website:
www.tamilsinformation.info

## ஸ்காபரோ - றூஜ்றிவர் இடைத் தேர்தல் அடுத்த மாத முற்பகுதியில்!

ஒன்ராறியோ மாகாண சபையின் ஸ்காபரோ-றூஜ்றிவர் தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் (செப்டம்பர்) முதலாம் அல்லது இரண்டாம் வாரத்தில் நடைபெறலா-மென்று தெரியவந்துள்ளது. இதற்கு ஏதுவான நிலையில் பிரதான மூன்று அரசியல் கட்சிகளும் தேர்தல் பரப்புரைகளை வேகப்படுத்தியுள்ளன.

இத்தொகுதியின் மாகாண சபை உறுப்பினராகவிருந்த லிபரல் கட்சியைச் சேர்ந்த பாஸ் பல்கிசுன் திடீரெனத் தமது பதவியை ராஜினாமாச் செய்ததால் இந்த இடைத்தேர்தல் நடைபெறுகின்றது.

இந்த இடைத்தேர்தலில் என். டி. பி கட்சியின் சார்பில் நீதன் சண் போட்டியிடுகிறார். ரொறன்ரோ கல்விச்சபையின் உறுப்பினராகவுள்ள நீதன் இத்தொகுதியின் பல பணிகளில் தொடர்ச்சியாகப் பல வருடங்களாகத் தம்மை ஈடுபடுத்தி வருபவர்.

திருவாளர்கள் பிரகால் திரு மற்றும் றேமன்ட் சோ ஆகியோர் முறையே லிபரல் மற்றும் கன்சர்வெடிவ் கட்சிகளின் சார்பில் போட்டியிடுகின்றனர்

## ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் தொகை அதிகரிப்பில்லை

கனடாவின் மிகப்பெரிய நகரசபைகளில் ஒன்றாக விளங்கும் ரொறன்ரோ நகாசபையின் உறுப்பினர் தொகையை அதிகரிப்பதா இல்லையா என்ற விவாதம் முடிவுக்கு வந்துள்ளது.

நகரில் அதிகரித்து வருகின்ற சனத்தொகையையும், அவர்கள் வாழும் வட்டாரங்களின் மக்கள் அதிகரிப்பையும் அடிப்படையாக வைத்து தற்போதைய 44 உறுப்பினர் தொகையை மூன்றினால் அதிகரித்து 47ஆக அதிகரிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டது.

ஆனால், ரொறன்ரோ நகர வரியிறுப்பாளர்களிடமிருந்தும், தற்போதைய உறுப்பினர்கள் மத்தியிலிருந்தும் இதற்கு ஆதரவு கிடைக்காததால் இந்த ஆலோசனை கைவிடப்பட்டுள்ளது.

## ரூடோ அரசாங்கம் அறிவித்த பிரஜாவுரிமைச் சட்ட மாற்றங்கள் இன்னமும் அமலுக்கு வரவில்லை!

முன்னைய ஆட்சியாளர்களான ஸ்டீன் ஹாப்பரின் காலத்தில் கடுமையாக்கப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படுமென கடந்த வருடத் தேர்தலின் போது ஜஸ்ரின் ரூடோவின் லிபரல் கட்சி உறுதி வழங்கியது.

தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து புதிய குடிவரவு பிரஜாவுரிமை மற்றும் அகதிகள் விவகார அமைச்சர் ஜோன் மக்கலம் குறிப்பிட்ட மாற்றங்கள் தொடர்பான அறிவிப்பை நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக விடுத்தார்.

இதன் தொடர்ச்சியாக பிரஜாவுரிமைச் சட்டத்தின் புதிய கெடுபிடிகளைத் தளர்த்துவதற்கான மசோதாவை (சி-24) அமைச்சர் கடந்த பெப்ரவரி மாதம் 25ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இது தொடர்பான விபரம் தமிழர் தகவலின் கடந்த மார்ச் மாத இதழின் மூன்றாம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது.

ஆனால் அரசாங்க அறிவிப்பு வெளியாகி மாதங்கள் ஐந்தாகியும் இதுவரை பிரஜாவுரிமைச் சட்ட மாற்றம் நடைபெறவில்லை. இதனால் இப்பொழுதும் ஹாப்பர் அரசு அறிமுகப்படுத்திய பிரஜாவுரிகைச் சட்டத்தின்படியே பொதுமக்கள் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய நிலையிலுள்ளனர்.

லிபரல் அரசு அறிவித்த மாற்றங்களை எதிர்பார்த்து மற்றொரு தொகை மக்கள் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பாது காத்திருக்கின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது. அமைச்சர் ஜோன் மக்கலத்தினால் அறிவிக்கப்பட்ட மாற்றங்கள் எப்போது அமலுக்கு வருமென்பதைச் சொல்லமுடியாத நிலையில் பிரஜாவுரிமைத் திணைக்கள அதிகாரிகள் உள்ளனர்.

இப்பொழுது பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்பவர்கள், அதற்கு நேரடி முன்னதான ஆறு வருடங்களில் நான்கு வருடங்கள் (1460 நாட்கள்) கனடாவுக்குள் வசித்திருக்க வேண்டும் என்பது கட்டாயம். அத்துடன் 14 வயதுக்கும் 64 வயதுக்கும் இடைப்பட்ட-வர்கள் கனடிய மொழிப் பரீட்சையில் கட்டாயம் சித்தியடைய வேண்டும்.

ஜஸ்டின் ரூடோவின் அரசு அறிவித்துள்ள மாற்றங்கள் சட்டமாகி அமுலுக்கு வருமாயின் விண்ணப்பதாரி கனடாவில் வசித்த காலம் நேரடி முன்னரான ஐந்து வருடங்களில் 1095 நாட்கள் என மாற்றம்பெறும். கனடிய மொழிப் பரீட்சைக்கான வயது 18 முதல் 54 வயதாக மாற்றம்பெறும்.

லிபரல் அரசினால் உறுதி வழங்கப்பட்ட குடிவரவுச் சட்ட மாற்றங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமொன்று கடந்த மாதம் பிராம்டன் நகரில் நடைபெற்றபோது அமைச்சர் ஜோன் மக்கலம் அதில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கனடாவில் குடியேறுவதற்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களைத் துரிதமாகப் பரிசீலனை செய்யும் முறையை இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

அதேசமயம், முன்னைய ஆண்டுகளைவிட இப்போது கனடாவில் அகதித் தஞ்சம் கோருவோரின் தொகையும் அதிகரித்துள்ளது. இருப்பினும், அகதிகளின் வருடாந்த எண்ணிக்கை இலக்கை அடைவதில் சில நெருக்கடிகள் காணப்படுகின்றது.

2012ம் ஆண்டுக்குப் பின்னர் அகதிக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலீனையில் தேக்கநிலை ஏற்பட்டதால், பலரது விண்ணப்பங்கள் ஆண்டுக்கணக்கில் விசாரணையின்றித் தாமதம் கண்டுள்ளது.



இவைகளைத் துரிதப்படுத்தவும் சில திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.●

எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடாவில் குடியேறும் நோக்கத்துடன் இடம்பெயரும் பிரித்தானியர்களின் தொகை அமெரிக்கர்களைவிட அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதாக பிரித்தானியா எடுத்த முடிவைத் தொடர்ந்தே இந்த அதிகரிப்பு காணப்படுகிறது. அனேகமான பிரித்தானியர்கள் கூகிள் தேடுபொறியின் வாயிலாக கனடாவுக்கு இடம்பெயரும் வழிமுறைகளை அறிந்து வருகின்றனர்.

ரொறன்ரோவில் சப்வே நிலையங்களின் (ரயில் நிலையங்கள்) சுற்றாடலிலுள்ள வீடுகளினதும் கொண்டோக்களினதும் விலைகள் மற்றைய இடங்களைவிட அதிகரித்துச் சென்றுள்ளதை புள்ளிவிபரமொன்று காட்டுகின்றது. போக்குவரத்து வசதி காரணமாகவே பல மில்லியன்களுக்கு இப்பகுதி வீடுகள் விலைபோகின்றன. யுனியன் மற்றும் யோர்க்மில்ஸ் சப்வே பகுதி குடியிருப்புகள் பல மில்லியன்களைத் தாண்டியுள்ளன.

கனடா முழுவதும் கடந்த ஆண்டில் மட்டும் 1.9 மில்லியன் குற்றச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது. எண்ணிக்கையளவில், 2014ம் ஆண்டின் குற்றச் சம்பவங்களை விட கடந்த ஆண்டில் 70,000 கூடுதலாக இடம்பெற்றுள்ளது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இதுவே மிகக்கூடுதலாக குற்றச் சம்பவங்கள் இடம்பெற்ற வருடமாகும்.

கனடியப் பிரதமரின் அழைப்பையேற்று பிரித்தானிய இளவரசர் வில்லியமும் மனைவி கேற் மிடில்ரொன்னும் இவ்வருட இலையுதிர் காலத்தில் கனடா வரவுள்ளனர். இரண்டாவது தடவையாக் கனடா வரும் இளவரசர் தம்பதியர் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கும் யுகோன் பிரதேசத்துக்கும் செல்வார்கள். இம்முறையும் இவர்களின் விஜய நிரலில் ரொறன்ரோ உட்பட ஒன்ராறியோ நகரம் எதுவும் இடம்பெறவில்லை.

கனடாவில் தொழில் புரிபவர்களில் ஐம்பது வீதமானவர்கள் தமது முதுமைக்காலத் தேவைக்கென எண்ணி தமது வீடுகள் மற்றும் சொத்துகளை விற்றுப் பணத்தை ஓய்வுகாலத்துக்கான நிதியில் வைப்பிலிடுவது தெரியவந்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்தில்கொண்டு பிற்காலத்தில் நிம்மதியான வாழ்வுக்காக இவ்வாறு அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது.

2013ம் ஆண்டு ஜுலை மாதம் 7ம் திகதி ரொறன்ரொ நகரில் பேருந்து ஒன்றுக்குள் வைத்து சுடப்பட்டு மரணம் விளைவித்த வழக்கில் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஜேம்ஸ் வோசிலியோவுக்கு ஆறு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதிகார துஷ்பிரயோகம் இங்கு இடம்பெற்றதாக நீதிபதி எட்வேட் தென் தமது தீர்ப்பில் தெரிவித்தார். தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கனடாவில் லூனி என அழைக்கப்படும் ஒரு டாலர் நாணயத்தினை வடிவமைத்த வரரான கலைஞர் றொபர்ட் றால்ப் கார்மைக்கல் கடந்த மாதம் காலமானார். நீர்வாழ் பறவைகளில் ஒன்றான லூனின் உருவம் பொறித்த இந்த நாணயத்தை றொபர்ட் 1987ல் உருவாக்கினார். கனடிய தபால் திணைக்களத்துக்கு லூன் பறவை வடிவிலான முத்திரையொன்றையும் இவர் தயாரித்தது குறிப்பிடத்தக்கது.

2026ம் ஆண்டின் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவுதற்கு கனடாவின் கல்ஹேரி நகரம் விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாகக் கனடாவின் முக்கியமான எழு நகரங்களுடன் ஆதரவு செறும் கூட்டங்களை ஏற்கனவே கனடிய ஒலிம்பிக் குழு நடத்தியுள்ளது. 2016ம் ஆண்டுக்கான அனுகூலம் குறைவாக இருக்கும் நிலையில், 2028ம் ஆண்டுக்கான கோடைகால ஒலிப்பிக்கை நடத்த கல்ஹேரி கேட்டுள்ளது.

## ஒன்ராறியோ மாகாணத்தில் வீதி விபத்துகள் அதிகரிப்பு

ஒன்ராறியோவில் கடந்த ஐந்தாண்டுகளில் முன்னெப்போதுமில்லாத வகையில் வீதி விபத்துகளும், விபத்து மரணங்களும் அதிகரித்துள்ளதாக மாகாணப் பொலிசார் அறிவித்துள்ளனர். இந்த ஆண்டின் முதல் ஆறரை மாதங்களில் 23 பேர் இங்கு வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். இது கடந்த ஆண்டின் இக்கால எண்ணிக் - கையைப் பொறுத்தவரை அதிகமாகும். 2010 21 பேரும், 2012ல் 27 பேரும், 2013ல் 28 பேரும், 2014ல் 32 பேரும், 2015ல் 31 பேரும் ஒன்ராறியோவில் வீதி விபத்துகளில் மரணமாகியுள்ளனர். ஆனால் இவ்வருட எண்ணிக்கை முன்னைய ஆண்டுகளைவிட அதிகமாக இருக்கலாமெனவும் பொலிசார் எச்சரித்துள்ளனர். பெரும்பாலான விபத்துகள் சாலைச் சந்திப்புகளிலேயே இடம்பெற்றுள்ளன.

## வீதிகளில் நடந்து செல்கையில் குறுஞ்செய்திகளைத் தடைசெய்யக் கோரிக்கை

ரொறன்ரோவின் நகர வீதிகளில் நடந்து செல்பவர்கள் தங்கள் கைத்தொலைபேசி-கள் ஊடாகக் குறுஞ்செய்திகள் அனுப்புவதைத் தடைசெய்யுமாறு ரொறன்ரோ நகரசபை ஒன்ராறியோ மாகாண அரசிடம் கோரியுள்ளது. அநேக வீதி விபத்துகள் குறுஞ்செய்தி அனுப்பியவாறு வீதிகளில் நடந்து செல்கையில் இடம்பெற்றுள்ளது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வாகனங்களை ஓட்டும்போது தொலைபேசியில் உரை-யாடுவதும், குறுஞ்செய்தி அனுப்புவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ரொறன்ரோ நகர சபையில் 26 வாக்குகளால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பிரித்தானியாவின் இரண்டாவது பெண் பிரதமர் தெரேசா மே

பிரித்தானியாவின் புதிய பிரதமராக தெரேசா மே கடந்த மாதம் 11ம் திகதி பதவியேற்றார். இவர் பிரித்தானியாவின் இரண்டாவது பெண் பிரதமர். முதலாவது பெண் பிரதமரான மார்கிரட் தாட்சருக்கு அடுத்த 'இரும்புப் பெண்மணி' என இவரை அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதென்ற கருத்துக் கணிப்பு முடிவையடுத்து பிரதமர் பதவியிலிருந்து டேவிட் கமரூன் பதவி விலக, அவரது இடத்துக்கு தெரேசா மே தெரிவானார். டேவிட் கமரூன் அரசாங்கத்தில் ஆறு ஆண்டுகளாக உள்துறை அமைச்சராகப் பணியாற்றியவர் தெரேசா மே.

## கனடிய குழந்தைகளுக்கான புதிய நலன் உதவித் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது

கனடியக் குழந்தைகளுக்கு மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'புதிய நலன் உதவித் திட்டம்' கடந்த மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. இதற்குரிய முதல் கொடுப்பனவு கடந்த மாதம் மூன்றாம் வாரத்தில் வழங்கப்பட்டது.

கனடாவின் குழந்தைகள் வரி நலன் உதவி, மற்றும் சர்வதேச (யுனிவேர்சல்) குழந்தை பாதுகாப்பு நலன் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்ததாக இந்தத் திட்டம் அமுலாக்கப்படுகின்றது. இப்பணத்துக்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

குடும்பத்தின் வருட வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் 6 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் வருடமொன்றுக்கு ஆகக்கூடியதாக 6,400 டாலர்களைப் பெறுவர். 6 வயதுக்கும் 17 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகள் வருடமொன்றுக்கு ஆகக்கூடியதாக 5,400 டாலர்களைப் பெறுவர். இத்தொகை 12ஆகப் பிரிக்கப்பட்டு மாதாமாதம் அனுப்பி வைக்கப்படும்.

இந்த நிதியைப் பெறுவதற்கு எவரும் விண்ணப்பிக்க வேண்டிய தேவையில்லை. ஒவ்வொருவரும் நிரப்பி அனுப்பிய 2015ம் ஆண்டின் வருமான வரிப்படிவத்தை அடிப்படையாகக் கொண்டு இது தீர்மானிக்கப்படுகின்றது. இக்கொடுப்பனவுக்கென அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் 22.4 பில்லியன் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம்

வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இந்த மாதம் 8ம் திங்கட்கிழமை திகதி நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் தொடர்ந்து நடைபெறும். இந்த மாதம் 31ம் திகதி தேர்த் திருவிழாவும், செப்டம்பர் மாதம் 1ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். 2ம் திகதி பூங்காவனம் இடம்பெறும்.

# Canada Child Tax Benefit - CCB
# A new tax free monthly payment

Last month (July), most parents with kids under age 18 received their first Canada Child Benefit (CCB) cheques, or, in many cases, direct-deposits. The CCB is a new, tax-free monthly payment made to eligible families to help them with the cost of raising children under 18 years of age and it replaces the current Canada Child Tax Benefit and the Universal Child Care Benefit (UCCB).

The CCB may also include the child disability benefit for children who qualify for the disability tax credit as well as any related provincial and territorial programs. If you've been getting the CCTB and/or the UCCB, and you (and your spouse or partner) filed a 2015 tax return, you don't have to do anything to start receiving the payments.

The Canada Revenue Agency uses information from your most recent tax return(s) to calculate how much your CCB payments will be. The benefit payments will be recalculated every July based on the prior year's income information.

Keep in mind that unlike the UCCB, the CCB monthly benefits are entirely tax-free, so you don't have to worry about coming up with the cash next April to pay the tax bill on your monthly benefits. Here are three ways to make the best use of your tax-free monthly CCB cheques.

**Contribute to an RESP** Consider directing a portion of those monthly cheques to a Registered Education Savings Plan, which can produce an immediate return of 20 per cent (to an annual maximum of $500 per child) by way of the Canada Education Savings Grant (CESG). For example, if you were to contribute just over $200 each month, per child, to an RESP in 2016, you could collect the full 2016 CESG. If you aren't already maxed out on prior years' CESGs, you can contribute more and catch up on the CESGs retroactively, up to an annual limit of $1,000 of CESGs per child.

**Contribute to an RDSP** If you have a child or other family member with special needs who qualifies for the disability tax credit due to a severe and permanent disability, consider using some of the monthly CCB to fund a Registered Disability Savings Plan. The RDSP is a tax-deferred registered savings plan available to Canadians age 59 and under who are eligible for the disability tax credit.

While your contributions are not tax deductible, all earnings and growth accrue on a tax-deferred basis. A main feature of the RDSP is the ability to supplement the plan with matching Canada Disability Savings Grants (CDSGs) and Canada Disability Savings Bonds (CDSBs) for those aged 49 and under. For example, if you contribute just $125 each month ($1,500 annually) to an RDSP for your child, you could receive up to $3,500 in CDSGs and another $1,000 in CDSBs, depending on your family income.

**Top up your RRSP or TFSA** Remember that just because these payments are called the Canada "Child" Benefit, there's no reason you can't use that money yourself to fund your own retirement. If you've got unused RRSP or TFSA room, consider investing those monthly cheques in one of these tax-advantaged plans. (Courtesy. National Post)●



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# உருளைக் கிழங்கு நல்ல உணவா?

பெருமையடித்துக் கொண்டார் அந்தப் பெண்மணி.

"கிழங்கை இவருக்கு நான் கண்ணிலையும் காட்டிறதில்லை. பாவம் விருப்பம்தான் ஆளுக்கு. நான்தான் அவற்றை வாயைக் கட்டிப் போட்டன்"

வழமையான செக் அப்பிற்கு வந்தபோது அவருடைய இரத்த சீனியின் அளவு நல்ல கட்டுப்பாட்டில் இருப்பதாக திருப்தியடைந்து மகிழ்ச்சியுடன் பாராட்டினேன்.

உருளைக்கிழங்கு கொடுக்காத தன்னுடைய கெட்டித்தனத்தால்தான் அவ்வாறு நடந்தது என பெரிய கடகத்தில் புகழைத் தன் தலையில் சுமந்து கொண்டார்.

நொட்டைச் சாப்பாடுகளைத் தவிர்த்து காய்கறி பழவகைளை அதிகம் சாப்பிட்டும், வாசிகசாலைத் திண்ணையில் குந்தியிருந்து அரட்டை அடிப்பதைத் துறந்து கடற்கரை-வரை நடைப் பயிற்சி செய்தும் அவர் செய்த சுய முயற்சிகள் யாவும் அவளது பெருவாயால் தூர்வாரி மூடப்பட்டன.

"நிலத்திற்கு கீழே விளையுறதுகளை கண்ணிலையும் காட்டக் கூடாது என்று டாக்டர் சொன்னதை நான் மறக்கிறதே இல்லை" என்றார் மற்றொருவர். கரட், உருளைக்கிழங்கு, வத்தாளை, கரணை, மரவெள்ளி, பனங்கிழங்கு, இவை யாவுமே நிலத்தின் கீழ் விளையும் கிழங்குகள்தான். ராபு, நோகோல், கரட், பீட்ரூட், இவையும் அவ்வாறுதான் மண்ணுள் விளைபவைதான்.

அந்த டாக்டர் மண்ணுக்கு கீழ் போய் எவ்வளவு காலமோ தெரியாது. அந்தக் காலத்தில் இருந்த மருத்துவ மற்றும் விஞ்ஞான அறிவைக் கொண்டு அவர் சொல்லியிருக்கக் கூடும் அல்லது இவர் தவறாக அர்த்தப்படுத்தியிருப்பார். ஆனால் இன்றும் அப்படியா?

**உருளைக் கிழங்கு**

உலகில் மிக அதிகமாகப் பயிரிடப்படும் உணவு வகைகளில் உருளைக் கிழங்கு முன்னணியில் நிற்கிறது. பருவகால வேறுபாடுகளைக் கடந்து வருடம் பூராவும் உலகெங்கும் விற்பனைக்குக் கிடைக்கிறது. இதற்குக் காரணம் எல்லாத் திசைகளிலும் இது விளைவிக்கப்படுவதே ஆகும்.

தாவர வர்க்கத்தில் இது தக்காளி, கத்தரி, மிளகு போன்றவற்றின் இனத்தைச் சேர்ந்தது. சரியான பருவத்தில் இதை கிண்டி அறுவடை செய்யாது விட்டால் அது வளர்ந்து பூத்துக் காய்த்து தக்காளி போன்ற ஒரு பழத்தைத் தரும்.

அவ்வாறு பூத்துக் காய்ப்பதற்கு தேவையான சக்தியை வழங்குவதற்காக தனது கிழங்கில் சேர்த்து வைக்கிறது. ஆனால் நாம் கிழங்கு நல்ல பருவத்தில் இருக்கும் போது கிண்டி எடுப்பதால் அதன் வாழ்க்கைச் சக்கரம் பூர்த்தியடைவதைத் தடுக்கிறோம்.

**உருளைக் கிழங்கின் போசாக்கு**

உருளைக் கிழங்கு முக்கியமான ஒரு மாப்பொருள் உணவாகும். அரிசி, கோதுமை போன்றவையும் மாப்பொருள் உணவுகள்தான். சமைக்காத அரிசியில் 80 சதவிகித-மும், உருளைக்கிழங்கில் 20, வத்தாளையில் 20 மரவெள்ளி 38 சதவிகிதம் என மாப்பொருள் இருந்தபோதும் சமைத்தபின் இவற்றில் பெரு மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மாப்பொருள் உணவுகள் ஜீரணமடைந்து குளுக்கோசாக குருதியில் கலந்து எமது உடலின் செயற்பாடுகளுக்கான சக்தியை வழங்கும். சக்தி கலோரி அலகுகளில் குறிப்பிடப்படுவதை அறிவீர்கள்.

சமைக்காத உருளைக் கிழங்கு 100 கிராமில் 70 கலோரிகள் இருக்கிறது. புழுங்கல் அரிசியில் 77 கலோரிகள் உள்ளது. எனவே ஏறத்தாள சமஅளவே அரிசியிலும் உருளைக்கிழங்கிலும் உள்ளது. அதே நேரம் அவித்த உருளைக்கிழங்கில் 80ம், சுட்டதில் 85ம், மசித்ததில் 108ம், பொரிதத்தில் 150 கலோரிகளும் உண்டு. அதே போல அரிசியை அவித்து சோறாக்கும் போது அதன் கலோரி வலு அதிகமாகவே செய்யும். ஆனால் பொரிக்கும்போது அல்லது பட்டர் போன்றவை சேர்ந்து மசியலாக்கும்போது உருளைக்கிழங்கின் கலோரி வலு அதீதமாகக் அதிகரிப்பதைக் மேலே கண்டிர்கள்

மாப்பொருளைப் பிரதானமாக இது வழங்குகின்ற போதும் இதில் விட்டமின் C மிக அதிகம் உண்டு. ஒரு கப் அவித்த உருளைக் கிழங்கானது எமது தினசரி விட்டமின் C தேவையின் கால்வாசியை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றைத் தவிர vitamin B6, copper, potassium, manganese ஆகியவையும் தாராளமாகக் கிடைக்கின்றன. எனவே நல்ல உணவுதான்.

மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது அதிலுள்ள நார்ப்பொருள் ஆகும். ஒரு கப் அவித்த உருளைக் கிழங்கில் சுமார் 2.93 கிராம் உள்ளது. அமெரிக்க விவசாய ஆய்வுத் திணைக்களமானது இதில் 60ற்கு மேற்பட்ட phytochemicals மற்றும் விட்டமின்கள் இருப்பதாக அறிவித்துள்ளது. இவற்றுள் உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமான ஒட்சிசன் எதிரிகளான (antioxidents) carotenoids, flavonoids போன்றவையும் அடங்குகின்றன.

இவற்றைத் தவிர பிரஷரைக் கட்டுப்படுத்தக் கூடிய இரசாயனமான kukoamines உருளைக்கிழங்கில் இருப்பதாக ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால் பிரஷரைக் கட்டுப்படுத்துவதற்-காக உருளைக் கிழங்கைச் சாப்பிடுங்கள் என எந்த மருத்துவரும் சிபார்சு செய்ய மாட்டார்கள். ஏனெனில் எவ்வளவு சாப்பிட்டால் எவ்வளவு குறையும் அதன் பலன் எவ்வளவு நேரத்திற்கு நீடிக்கும் என்பது பற்றிய தெளிவான முடிவுகள் எதுவும் இதுவரை கிடையாது.

உருளைக்கிழங்கைச் சமைக்கும்போது நன்கு கழுவிய பின் தோல் நீக்காமல் சமைப்பது அவசியம். ஏனெனில் அதிலுள்ள நார்ப்பொருளில் பெரும்பகுதி அதிலேயே உள்ளது. விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அதில் அடங்கியுள்ளன.

**உணவுகளில் மாப்பொருள் ஒப்பீடு**

ஒரு முட்டையின் அளவுடைய அவித்த உருளைக்கிழங்கு, ஒரு மேசைக் கரண்டி சோறு, ஒரு மெல்லிய பாண் துண்டு, ஒரு சிறிய நானில் (NAN) துண்டு, கோர்ன் பிளேக் இரு மேசைக் கரண்டி

(32ஆம் பக்கம் வருக)



அ. முத்துலிங்கம்


# யக்ஞசேனி நெருப்பில் உதித்தவள்

நிரோதினி பரராஜசிங்கம் நடனக் குழுவினர் வழங்கும் நாட்டிய நாடக நிகழ்ச்சியை பார்க்க வேண்டும் என இரண்டு மாதம் முன்னரே தீர்மானித்திருந்தேன். மதுரை ஆர்.முரளிதான் நெறியாள்கையில், கலைமாமணி உமா முரளி திரௌபதியாக நடிக்கும் இந்த நிகழ்ச்சி ரொறன்ரோவில் முதன்முதலாக அரங்கேறுகிறது. இதன் மூலம் கிடைக்கும் அத்தனை நிதியையும் ஹார்வார்ட் தமிழ் இருக்கைக்கு வழங்கப்போவதாக அறிவித்திருந்தனர். அதுவும் ஒரு முக்கிய காரணம். நான் அரங்கத்துள் நுழைந்ததும் அப்படியே ஒரு நிமிடம் நின்றேன். ஏற்கனவே கூட்டம் நிரம்பி வழிந்தது.

தன் அரண்மனைக்குத் திரும்பிய துரியோதனனால் இந்த அவமானத்தை தாங்கமுடியவில்லை. பாண்டவர்களைப் பகடை ஆட அழைத்து சூழ்ச்சியினால் வென்று பாண்டவரையும் திரௌபதி- யையும் அடிமைகளாக்குகிறான். சபையிலே துரியோதனன் கட்டளையில் துச்சாதனன் திரௌபதியின் துகிலுரிய அது வளர்ந்துகொண்டே போகிறது. விரித்த கூந்தலுடன் திரௌபதி “ஆணை யுரைத்தேன் பாவிதுச் சாதனன் செந்நீர், அந்தப் பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம், மேவி இரண்டுங் கலந்து, குழல் மீதினிற் பூசி நறுநெய் குளித்தே சீவிக் குழல்முடிப் பேன்யான், இது செய்யுமுன்னே முடியேன்.” என சபதமிட்டபோது சபை சிலிர்த்து காட்சியில் ஒன்றிவிட்டது.









யக்ஞசேனி என்றால் யாக நெருப்பில் பிறந்தவள் என்று பொருள். துருபத அரசனுக்கு யாக குண்டத்தில் பிறந்த மகள், திரௌபதி. அரசன் நடத்திய சுயம்வரத்தில் திரௌபதியை அர்ச்சுனன் வில்வித்தையில் வென்று அழைத்துப்போக அவனுடைய அம்மா குந்திதேவி அவளைப் பாண்டவர் ஐவருக்கும் மனைவியாக்குகிறாள்.

பாண்டவர், இந்திரப்பிரஸ்தம் என்ற புதிய நகரை நிர்மாணித்து ஆட்சிபுரிந்தபோது துரியோதனன் தன் தம்பியருடன் விருந்துக்கு வந்த இடத்தில் தண்ணீருக்கும் பளிங்குத்தரைக்கும் வித்தியாசம் தெரியாது தடுமாறியபோது திரௌபதி சிரித்துவிடுகிறாள்.

பாண்டவரின் வனவாசம் முடிந்து போர் தொடங்குகிறது. இரு பக்கங்களிலும் வீரர்கள் விழுகிறார்கள். இறுதியில் பீமன் துரியோதனன் தொடையில் அடித்து அவனைக் கொல்கிறான். திரௌபதி, இறந்தவனின் ரத்தத்தை தன் குழலில் பூசி சபதத்தை நிறைவேற்றுகிறாள். யுத்த களத்தை பார்க்கிறாள், திரௌபதி. அத்தனை அழிவும் தன்னுடைய சபதத்தால் நேர்ந்தது என்பதை உணர்ந்தபோது நெஞ்சம் துணுக்குறுகிறது. அவர்கள் வெற்றி பெறவில்லை; எதிராளிகள் தோற்கடிக்கப்படவில்லை என்பதையும், மானுட வாழ்க்கையின் நிலையாமையையும் உணருகிறாள். அத்துடன் ஏறக்குறைய 60 பேர் →





பங்குபற்றிய அந்தப் பிரம்மாண்டமான நாட்டிய நிகழ்வு நிறைவுக்கு வருகிறது.

நாடகத்தில் பல புதுமைகள் புகுத்தப்பட்டிருந்தன. உணர்ச்சிமயமான பாடல்களுக்கு தகுந்த இசை அமைத்து, வசனங்களும் செதுக்கப்பட்டிருந்தன. தொழில்நுட்பத்தின் முழுப் பயன்பாடும் மேடையில் தெரிந்தது. நதிகள், கடல் அலைகள், மலைகள், அருவிகள், கானகங்கள், அரண்மனைகள் என எண்மிய நுட்பத்தில் காட்சிகள் பின் திரையில் நிமிடத்துக்கு நிமிடம் மாறின. ஒவ்வொரு காட்சி மாறுதலும் அது மாறுகிறது என்பதே தெரியாமல் ஒன்றுடன் ஒன்று இணைந்துகொண்டன. நடனத்தின் சிறப்பு என்னவென்றால் அந்தந்தப் பாத்திரங்களுக்கு பொருத்தமான நடனக் கலைஞர்களை தெரிவு செய்ததுதான். கணபதி ரவீந்திரன், சுரேஷ் ராஜா, சிறீமுருகன் போன்ற தேர்ந்த நடிகர்களின் பங்களிப்பு நாட்டிய நாடகத்துக்கு மெருகூட்டியது என்று சொல்லலாம். தன்னலம் பாராது ஹார்வார்டு நிதிக்காக இரவு பகலாக அர்ப்பணிப்புடன் உழைத்த நிரோதினி பரராஜசிங்கத்தையும், அரங்க நிர்வாகத்தை சரியாகக் கையாண்ட இளங்கோ சிவனையும், தொகுத்து வழங்கிய கங்காதரனையும் மறக்க முடியாது. நிகழ்வின் முடிவில் 25,000 டாலர்கள் மேடையிலேயே ஹார்வார்டுக்கு வழங்கப்பட்டது. அரங்கத்தில், ஒவ்வொரு நிமிடமும் சபையோரின் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் உணரக்கூடியதாக இருந்தது. விழா முடிந்தபின்னர் பலர் ஹார்வார்டுக்கு எப்படி பணம் கட்டுவது என்று கேட்டார்கள். Harvardtamilchair.com என்ற இணையத்தளத்தில் எல்லா விவரங்களும் உள்ளன. இலகுவான வழி Generosity.com இணையத்தளத்துக்குச் சென்று harvard tamil chairக்கு கடன் அட்டை மூலம் பணம்



செலுத்துவதுதான். இரண்டே நிமிடம்தான். உடனேயே உங்களுக்கு ரசீதும் கிடைக்கும். உங்கள் பெயர் ஹார்வார்டில் நிரந்தரமாகப் பதிவு பெறும்.

எழுத்தாளர் ஆர்.எல்.ஸ்டீவன்ஸன் சொன்னார். 'எத்தனை அறுவடை என்று எண்ணாதே, எத்தனை விதைகள் ஊன்றினாய் என்று எண்ணு.' இது விதைக்கும் காலம். எங்கள் வருங்கால சந்ததியினருக்கு நாம் விட்டும் போகும் செல்வமாக ஹார்வார்ட் தமிழ் அரியாசனம் அமையும்.● (ஒளிப்படங்கள் - செய்தி.கொம்)










கனகேஸ்வரி நடராஜா

# வெளிநாட்டுக் காசு
# Foregin Currency

அண்மையில் சிறிலங்கா சென்று வந்த ஒரு குடும்பத்தினரைச் சந்தித்தேன். அவர்கள் தமது பிரயாண அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு தாய்நாட்டின் மூலைமுடுக்குகள் எல்லாம் சென்று பழ வகைகள், கடலுணவுகள் என்று அனைத்தையும் அனுபவித்துவிட்டு வந்துள்ளனர். இவர்களுக்கு விருந்து படைத்தவர்களில் பெரும்பான்மையோருக்கு அவர்களின் பிள்ளைகளோ உறவினர்களோ மாதாமாதம் ஒழுங்காகக் காசு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். திடீரென பெரும் செலவு ஏற்படும்பொழுது இவர்களுக்கு கைகொடுக்க வெளிநாட்டிலுள்ளவர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர். இவ்வாறு அந்நிய செலாவணியில் வாழும் குடும்பத்-தவர்கள் மிகவும் சொகுசான வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். பக்கத்துத் தெருவுக்குச் செல்வதென்றால்கூட இவர்களுக்கு முச்சக்கர வண்டி தேவைப்படுகின்றது.
வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தை துரித பணமாற்று நிறுவனத்தார் வீடு தேடிச் சென்று கொடுக்கிறார்கள். இதனை அள்ளி வீசிச் செலவழிக்கும் இவர்கள் இந்தக் காசை தமது பிள்ளைகளோ உறவினர்களோ சம்பாதிக்க எவ்வளவு கடினப்பட்டிருப்பார்க -ளென்று ஒரு கணம்கூட சிந்திப்பதில்லை.

சத்தி முத்துப்புலவர் என்பவர் பத்தாம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர். அவரின் பின்வரும் பாடல் தனிப்பாடல் திரட்டில் (506) காணப்படுகிறது. இப்பாடலில் அவர் தமது நிலைபற்றி மனைவிக்கு எடுத்துரைக்கும்படி காலநிலை காரணமாக இடம்பெயரும் நாரைக்கு கூறுகிறார். இதனை வாசிக்கும்போது புலம்பெயர்ந்தோரின் நிலைகூட இப்படித்தான் இருக்கிறது எனக்கூறுவது தவறில்லை.

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவழக்கூர் வாய் செங்கால் நாராய்
நீயும் நின்மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீராயின்
எம்மூர் சத்திமுத்த வாவியுள் தங்கி
நனைசுவர் கூரை கனைகுரல் பல்லி
பாடு பார்த்திருக்கும் எம்மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனை கண்டனம் எனுமே.
(தனிப்பாடல் திரட்டு _ 506)

இப்பாடலின் விளக்கம் பின்வருமாறு - "பிளந்த பனங்கிழங்கு போன்ற வாயையுடைய செங்கால் நாராயே! நீயும் உன் மனைவியும் தெற்கே சென்று கன்னியாகுமரியில் நீராடிவிட்டு வடதிசை நோக்கி செல்கையில் எனது கிராமமாகிய சத்திமுத்தில் உள்ள வாவியில் தங்கி, நான் எப்பொழுது மதுரையிலிருந்து திரும்பி வருவேனென எங்கள் ஓலை வீட்டின் ஈரச்சுவரிலிருக்கும் பல்லி என்ன சொல்கிறது எனப் பார்த்திருக்கும் என் மனைவியிடம், வடதிசையில் மெலிந்த உடம்பை கைகளாலும் கால்களாலும் பொத்தியவாறு பெட்டிக்குள்ளிருக்கும் பாம்புபோல் வாழ்ந்து கொண்டிருக்கும் உன் ஏழைக் கணவனைக் கண்டேன் என்று கூறுவாயாக".

இந்தப் பாடலில் புலவரின் ஏழ்மை, ஏக்கம், தனிமை, இயலாமை, பிரிவுத்துயர் எல்லாமே படம்போல் எம் கண்முன்னால் விரிகிறது. பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழையாளன் என்ற வரி வாசிப்போரின் கண்களில் நீரை வரவழைக்கும் தன்மை கொண்டது.

1980களில் இங்கிருந்த புலம்பெயர்ந்தவர்களில் இளைஞர்கள் மாத்திரமல்லாது, யுவதிகள், பெரியோர், குழந்தைகள் எனப்பலரும் பயண முகவர்களின் துணையுடன் உயிருக்குப் பயந்து அதனை பணயம் வைத்து புற்றீசல் கூட்டம்போல் இங்கு வந்தவர்கள். இன்று நம்மவர்கள் வாழும் சொகுசு வாழ்க்கையை அவர்கள் வாழவில்லை.

ஓரறையில் எத்தனையோ இளைஞர்கள் ஒன்றாகக் குடியிருந்தனர். எல்லோருமே இந்நாட்டுக்குப் புதியவர்கள். குருடனுக்குக் குருடன் வழிகாட்டியது போன்றது இவர்கள் வாழ்க்கை. இவர்களுக்கு ஏகப்பட்ட செலவுகள் இருந்தன. பிரயாண முகவர்களுக்குக் கொடுப்பதற்குப் பட்ட கடன்களை அடைக்க வேண்டும், வீட்டுக்கு காசு அனுப்ப வேண்டும், இங்கு வாழ வேண்டும், அகதி வழக்குகளுக்காகச் செலவழிக்க வேண்டும் என்று பல செலவுகள். ஒரு நாளில் இரண்டு வேலைகள் செய்வது கட்டாய தேவையாக இருந்தது. இவர்களின் இயலாமையைப் பயன்படுத்திப் பல முதலாளிகள் குறைந்த சம்பளத்தில் வேலை வாங்கினார்கள். ஆனால் இன்று நிலைமை மாறினாலும் ஊருக்குக் காசு அனுப்ப வேண்டுமென்றால் ஏதோ விதத்தில் மேலதிகமாகச் சம்பாதிக்க வேண்டியுள்ளது.

இங்குள்ள எம்மவர்கள் என்றும் தாங்கள்பட்ட கஷ்டங்களை மறக்கவில்லை. பஞ்சம் போனாலும் பஞ்சத்தில் பட்ட வடுக்கள் அவர்கள் மனதில் இருக்கிறது. எந்தவொரு வேலைக்குச் சென்றாலும் கடின உழைப்புத் தேவைப்படுகிறது. எட்டு மணித்தியாலங்கள் ஒரேயடியாக நின்று வேலை செய்ய வேண்டி வருமென எமது நாட்டில் நினைத்துக்கூடப் பார்த்திருப்போமா? கணினி முன்னால் கண் வெட்டாமல் இடுப்பு உளைய மணித்தியாலக் கணக்கில் வேலை செய்தாலும் அவைகளை முடித்துக் கொடுக்க முடியாமல் வீட்டிலும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டியுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக கடும் குளிர் ஆறுமாதம் வாட்டியெடுக்கும். இதனால் இங்கு நம்மவர்கள் உழைக்கும் ஒவ்வொரு டாலரும் எத்தனையோ இரத்தத் துளிகளுக்குச் சமன்.

ஊருக்கு அனுப்புவதற்கு இப்பணத்தை உழைப்பதற்குப் படும் கஷ்டத்தை அங்குள்ளவர்களுக்குத் தெரியப்படுத்துவது அவசியம். இவர்கள் கூறினாலும் ஊரில் இருப்பவர்கள் அதனை நம்பத் தயாராக இருக்கிறார்களா என்பது தெரியாது. இங்கிருந்து ஊருக்குச் செல்பவர்கள் தாங்கள் ஏதோ கொடிகட்டிப் பறப்பதுபோல் போலி நாடகம் போட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். அங்குள்ளவர்களும் வெளிநாட்டில் தங்கள் பிள்ளைகள் உறவினர்கள் இருப்பதால் தாங்கள் அந்தஸ்து கூடியவர்களாக வாழவேண்டுமென்ற போலி கௌரவத்தைப் பேணுகிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். இதற்கு இங்குள்ளவர்களுக்கும் அங்குள்ளவர்களுக்குமிடையில் உண்மையான புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.●



ப. ஸ்ரீஸ்கந்தன்

# பார்வைப் பகிர்வுகள்

03

## காலத்தின் விளிம்பு

கடந்த பங்குனி மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் பா.அகிலன் எழுதிய ஷகாலத்தின் விளிம்பு - யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளும் அவற்றைப் பாதுகாத்தலும்' என்ற நூல் வெளியீடு இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரான பாக்கியநாதன் அகிலன் யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகள் குறித்து அவ்வப்போது பத்திரிகைகளுக்கு எழுதிய பத்திகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒல்லாந்தர் கோட்டை, நிலாவரைக் கிணறு, கீரிமலைக் கேணி போன்ற சில மரபுரிமைச் சொத்துகளை மட்டும் அறிந்திருந்த எனக்கு அகிலன் எழுதிய பத்திகள் பெரும் ஆச்சரியத்தைத் தந்தன. இரண்டாம் உலக மகாயுத்த கால ஷசைரன்' ஒலிமேடை, பருத்தித்துறை ஓடைக்கரை வீதி, சுதுமலை அம்மன் கோயில் முகப்பு மண்டபம், கீரிமலை சிறாப்பர் மடம், இணுவில் மக்லியட் வைத்தியசாலை, சங்கானையில் அமைந்துள்ள போர்த்துக்கேயர்கால தேவாலயக் கட்டுமானம், புதுமை மாதா கோவில் நீண்டு பயணம், வல்வெட்டித்துறை ரா.வே.இராமசுவாமி மடம் என்று பல்வேறு மரபுரிமைச் சின்னங்கள் குறித்து இங்கு பேசப்பட்டுள்ளது.

வீதி அகலிப்பு என்ற பெயரில் அழிக்கப்படப்போகும் முக்கிய சின்னங்கள் குறித்து இந்நூல் எச்சரிக்கிறது. நாவலர் சைவப் பாடசாலையை ஆரம்பித்தபோது வீடுதோறும் படி அரிசி தண்டி, அதனை விற்றுக் காசாக்கியே ஆசிரியர்களுக்கச் சம்பளம் கொடுத்தார். அகலிக்கப்படவிருக்கின்ற காங்கேசன்துறை வீதி பகுதியாகவோ முழுமையாகவோ வரலாற்றின் சான்றாதாரங்களை, மரபுரிமைகளை அழிக்கப்போகும் கைங்கரியத்தில் நாவலர் பாடசாலையும் அழியவுள்ள இடங்களின் பட்டியலில் உள்ளது. அது அப்பாடசாலை வளவுக்குள்ளிருக்கும் யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு குரவர் கோயிலையும் அழிக்கும்.

கே.கே.எஸ். வீதி அகலிப்பில் பிரபலமான கில்னர் மண்டபம், யாழ். இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபம், யோகர் சுவாமியின் சிவதொண்டன் நிலையம் போன்றவையும் சிக்குண்டுள்ளன.
வண்ணார்பண்ணையிலுள்ள நாயக்கர் கால் சுவடுகளைக் கொண்டுள்ள கதிரேசன் கோயிலும் மேற்படி வீதி அகலிப்பில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வீதி அகலிப்பில் அமெரிக்க திருச்சபையின் அமைவுகள், கண்டிவீதி அகலிப்பில் கத்தோலிக்க வரலாற்றுச் சின்னங்கள், பருத்தித்துறை வீதி அகலிப்பில் செல்லப்பா சுவாமியின் சமாதி ஆலயம், பலாலி வீதி அகலிப்பில் குடைச்சாமி அல்லது கந்தையா சாமியின் சமாதி மீது கட்டப்பட்ட விநாயகர் ஆலயமென்று ஷயாழ்ப்பாண அபிவிருத்தி' என்பது அச்சத்தைத் தருகிறது.

மரபுரிமைகளை மதித்தலும் பேணுதலும் என்பது உலகளாவிய மனிதகுல மாண்பினைக் காத்தலாகும். உரிமைக்காகப் போராடும் ஒரு சிறுபான்மைச் சமூகமென்பது மரபுரிமைகள் காத்தல், போற்றுதல், அதனூடாக அதன் பண்பாட்டு வரலாற்றையும் பொருளாதார மேம்பாட்டையும் நோக்கிச் செல்லும் அதேவேளை அதன் அழிவைக் கண்டும் காணாதிருத்தல் இனத்தின் வரலாற்றுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும்.



கலை வரலாற்றை பயில்துறையாகக் கொண்ட நூலாசிரியர் பா.அகிலன் நாடகத்திலும் அரங்கக் கலைகளிலும் மரபுரிமைக் கல்வியிலும் ஈடுபாடுடையவர். சிறந்த கவிஞர். பதுங்கு குழி நாட்கள் இவர் எழுதிய கவிதை நூலாகும்.

## ஞாயிறு தோறும் நாடகம்

ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின்மீது அக்கறை கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தும் மக்கள் சக்தி என்ற வீதி நாடகத்தைப் பார்த்தது பெரும் அனுபவம். யாழ்ப்பாணத்து ஆனைக்கோட்டையில் உயரப்புலம் என்ற இடத்தில் இயங்கிவரும் யாழ்ப்பாண அரங்கக் கலைக்கழகம் ஞாயிறு தோறும் நாடக ஆற்றுகைகளை நிகழ்த்தி வருகிறது. Welcome to Sunday Show என்னும் பெயரில் அவலம், நுளம்பு, காளான், வரைவாளி, கருச்சிதைவு, அகால நிலம், அரும்பு போன்ற பல நாடகங்களை இக்கழகம் மேடையேற்றியுள்ளது.

நாடக ஆற்றுகைகள், பயிற்சிப் பட்டறைகள், திரைப்படக் கருத்தரங்கு, தெருவெளி நிகழ்கலைகள், விழிப்புணர்வு நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், குறுந்திரைப்படம் போன்ற பல செயற்பாடுகளை யாழ்ப்பாண அரங்கக் கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. தி.தர்மலிங்கம் இக்கழகத்தின் முதுகெலும்பாகச் செயற்பட்டு வருகிறார்.

இக்கழகம் மேற்கொண்டு வரும் தெருவெளி நாடகங்கள் சமூகச் சீர்கேடுகள், பாலியல் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை, மீள்குடியேற்றம் போன்ற பல பிரச்சனைகளைச் சொல்வன. எங்கள் கதை, மக்கள் சக்தி, கசிப்பரசன், டெங்கு, மிதிவெடி என்பன இவ்வாறு மேடையேற்றப்பட்ட தெருவெளி நாடகங்களாகும்.

யாழ்ப்பாண அரங்கக் கலைக்கழகம் ஏன், வன்மம், வடு, கெடு, காவு போன்ற குறும்படங்களையும், சத்தியமே ஜெயம், பொன்வண்டு ஆகிய ஆவணப் படங்களையும் தயாரித்துள்ளது.

யுத்தத்தின் பிற்பாடு மண்ணில் கலைகளை ஆற்றுகை செய்வதில் யாழ்ப்பாண அரங்கக் கலைக்கழகம் முக்கிய பங்கினை வகிக்கிறது. அதிலும், சமூகச் சீர்கேடுகளை கேள்விக்குள்ளாக்கும் கருப்பொருட்களே ஆற்றுகைகளின் சிறப்பு.●



பொன்னையா விவேகானந்தன்

# கற்பித்தலின் புதிய நுட்பங்கள்

17

கடந்த கட்டுரைகள் பலவும் சுருக்கமான முறையில் ஓர் ஆசிரியரின் பொறுப்புகள், வகுப்பறை முகாமைத்துவம் பற்றிக் கூறுவனவாக அமைந்தன. ஆசிரியரது பொறுப்புகள் பற்றியும் வகுப்பறை முகாமைத்துவம் பற்றியும் விரிவாகக் கூறும் நூல்கள் பல ஆங்கில மொழியில் வெளிவந்துள்ளன. இத்துறைகள் பற்றி விரிவாக அறிய முனைவோர் அவ்வாறான நூல்களை வாசித்தல் நன்று.

இக்கட்டுரைத் தொடரின் அடுத்த அத்தியாயமாக இருக்கப் போவது நவீன கற்பித்தல் முறைகளாகும். இத்தொடரின் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போன்று, சமகால கற்பித்தல் முறைகள் குறித்துத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் புதிய தேடல்களுக்கு வழி வகுத்து வருகின்றன. வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகளின்றி, வகுப்பறையில் இருக்கும் அனைத்து மாணவர்களும் சமமாக வழங்கப்படும் கல்வியின் வாயிலாக மேம்பட வேண்டும் என்ற இலக்கைக் குறியாகக் கொண்டு புதிய கற்பித்தல் முறைகளைக் கல்வியியலாளர் உருவாக்கி வருகின்றனர்.

**மாணவர் மையக் கல்வி**

தற்போது உலகெங்கும் செல்வாக்குப் பெற்று வருகின்ற கற்பித்தல் முறை மாணவர் மையக் கல்வி முறையாகும். நீண்ட காலமாக நடைமுறையிலிருந்த ஆசிரியர் மையக் கல்வி அனைத்து மாணவரும் சமமான கல்வியை வழங்குவதில் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது என்ற கருத்து வலுப்பெற்றதை அடுத்து மாணவர் மையக் கல்வி முறை உருவாக்கப்பட்டது.

ஆசிரியர் மையக் கல்வியானது, மாணவருடைய தேவைகளை நோக்கமாகக் கொள்ளாது ஆசிரியர் வகுத்த கற்பித்தல் இலக்குகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆசிரியர் மாணவருக்கு நேருக்கு நேராகக் கற்பித்தல் (directed approaches) என்ற வகையிலேயே இந்தக் கல்விமுறை காணப்பட்டது. இதில் மாணவருடைய விருப்புகளுக்கும் ஈடுபாடுகளுக்கும் பேரிடம் இருக்கவில்லை. மாணவரை மதிப்பிடும் கருதுகோள்கள் யாவும் ஆசிரியரினாலேயே தீர்மானிக்கப்பட்டன.

மாணவர் ஆசிரியரிடத்தே முற்றுமுழுதாகத் தங்கியிருக்கின்ற நிலை மரபுவழிக் கற்பித்தலில் காணப்படுகின்றது. வினாவும் தயார் செய்யப்பட்ட சரியான விடையுமே மதிப்பீடாகின்றது. வகுப்பறையில் மாணவர் தனித்துச் செயற்படுவதுடன் தம்மை தேர்வுக்கும் தர உயர்வுக்கும் மட்டுமே தயார் படுத்துகின்றனர். கல்வியை ஆழமாக விளங்கிக்கொள்கின்ற வழிவகைகள் இதில் இருக்கவில்லை. இக்குறைபாடுகளே மாணவர் மையக் கல்வியின் தோற்றத்துக்கு வழி வகுத்தன எனலாம்.

ஆசிரியர் மையக் கல்வியை Traditional Classroom என்றும் மாணவர் மையக் கல்வியை Personalized Learning environment என்றும் கூறுவர். இவ்விரு கல்விமுறைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கீழ்க்காணும் சட்டகத்தில் காணலாம்.

| Traditional Classroom (Proving - Performance Orientation) | Personalized Learning Environment (Improving - Learning Orientation) |
|---|---|
| Teacher-centered | Learner-centered |
| Learners follow instructions | Learners actively participate in learning |
| Goal is correct answer | Goal is for deeper understanding |
| Whole class lesson with learners working alone | Learning happens individually, in pairs, threes and in groups |
| Teacher gives times to answer questions | Message is on improvement with a focus on effort |
| Learners focus on tests and grades | Performance linked to effort and progress |

மொழிக்கல்வி வகுப்புகளை மையப்படுத்தி ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வு முடிவுகள் கீழ்க்காணும் தரவுகளைத் தந்தன.

* உண்மை உலகோடு தொடர்பாடும் அளவுக்கு மொழி வளம் இல்லாதிருத்தல்
* பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேச முடியாதிருப்பதைப் பற்றிய பேரச்சம்
* பேசவேண்டிய நிலைகளில் தவறாகப்பேசி முகமிழந்து விடுவோமோ என்று வாயடைத்து நிற்றல்
* ஆசிரியரின் உதவி, வழிகாட்டலின்றிக் கற்றலைத் தொடரமுடியாதிருத்தல்
* யாருக்காவது கற்கின்ற மொழியைப் பேசத் தெரியுமா? என்று கேட்டால் மன உளைச்சலுற்று நிற்றல்

தாய்மொழி அல்லது மற்றுமொரு புதிய மொழியைக் கற்கும் மாணவரிடத்தே கண்டறியப்பட்ட இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வைத் தரவல்ல சிறந்த கற்பித்தல் முறை மாணவர் மையக் கல்வியே எனக் கல்வியியலாளர் கருதினர்.

மாணவரிடையே 'என்னால் முடியும்' என்ற நடத்தையை நம்பிக்கையோடு ஏற்படுத்துவதே மாணவர் மையக் கல்வியாகும்.

ஊக்கப்படுத்தலும் இன்புறுத்தலும் இக்கல்வி முறையின் சிறந்த விளைவுகளாகக் கருதப்படுகின்றன. இக்கல்விமுறை சுயமாகக் கற்றலில் மேலதிகப் பொறுப்புகளை மாணவருக்கு வழங்குகின்றது. செயல்முறைகளின் வழியாகக் கற்கும் மாணவர் தாமாக முடிவெடுக்கும் சூழ்நிலையை இக்கல்விமுறை ஏற்படுத்துகின்றது. இது மறக்கமுடியாத அழுத்தமான நினைவிருத்தலைப் பெரிதும் ஏற்படுத்துகின்றது. ஏனெனில் தனிப்பட்டதும் அகவாழ்வுடன் தொடர்பான அனுபவங்களுடனும் இக்கல்விமுறை இணைக்கின்றது. இது உயிர்ப்பான மொழி ஊடாட்டத்தை ஏற்படுத்துவதுடன் உண்மை உலகோடு தொடர்பையும் ஏற்படுத்துகின்றது.

மேற்குலக நாடுகளில் பெரும் செல்வாக்குப் பெற்றுவரும் மாணவர் மையக் கல்வி முறை இப்போது ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் சிறப்பிடம் பெற்று வருகின்றது. இக்கற்பித்தல் முறையினைச் சற்றே விரிவாக நோக்குதல் ஆசிரியருக்கும் மாணவருக்கும் பயன்தரவல்லதாகும்.●



எஸ். ராஜ்மோகன்

# வேலைத்தள பாதுகாப்பு

24

மனிதனின் இருப்பையும், சமூகத்தின் உறுதிப்பாட்டையும் நிலை நிறுத்திவைப்பது, தனிமனித பாதுகாப்பின் தெளிவுநிலையாகவும், பரிணாம வளர்ச்சியின் படிநிலையாகவும் கருதப்படுகின்றது. தனிமனித சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Health and Safety) என்பது அடிப்படையில் சமுதாய முன்னேற்றத்தின் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே நோக்கப்படுகின்றது. ஒரு சமூகத்தின் ஆளுமை, பொருளாதாரம், கல்வி, ஒழுக்கம் போன்ற விடயங்கள், தனிமனித பாதுகாப்பு விதி முறைகளை பொது வாழ்வினுள் கொண்டுவர அனுமதிக்கிறது.

நமது செயற்பாடுகள் அனைத்துக்கும் பாதுகாப்பும், சுகாதாரமும் அவசியம் தேவைப்படுகின்றது. நமது செயற்பாட்டிலோ அல்லது வேறு எவரது செயற்பாட்டிலோ பாதுகாப்பற்ற நிலை ஏற்படும்போது, அதன் எதிர்வுகளை முறியடித்து வெற்றி கொள்ளல் அவசியமாகின்றது. அரச இயந்திரங்கள், தனிமனித பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் திட்டங்களை சரியாக அமுல்படுத்தாது விட்டால் உயிர்ச்சேதம், மன உளைச்சல், உடல் காயம், அங்கவீன இழப்பு, இயற்கை அழிவு, பொருளாதார சேதம் போன்ற பல அழிவுகள் உருவாகின்றன. 'வருமுன் காப்போம்' என்பதற்கமைய, இழப்புகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு பாதுகாப்பு மற்றும் சுகாதார முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது.

உலகளாவிய ரீதியில் வேலைத்தள விபத்துக்களே அதிகளவில் இடம்பெறுகின்றன. இதன் காரணமாக  வேலைத்தள பாதுகாப்பு பற்றிய விதிமுறைகளுக்கும், விழிப்புணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. கனடாவில் 1987ஆம் ஆண்டுகாலப் பகுதிவரை அதிகரித்து வந்த வேலைத்தள தொழிலாளர் விபத்துக்களில் பெரும் விழுக்காடு ஏற்பட்டது வரவேற்கத்தக்க விடயமாக கருதப்படுகின்றது. 1982ஆம் ஆண்டு 1000 கனடிய தொழிலாளர்களுக்கு 43.8 தொழிலாளர் என்ற விகிதத்தில் விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது 1987ஆம் ஆண்டு 48.9 ஆக அதிகரித்திருந்தது, ஆனால் இது 2010 ஆம் ஆண்டு 14.7 ஆகக் குறைவடைந்துள்ளது. மாகாண ரீதியாக பார்க்கும்போது ஒன்ராறியோ மாகாணத்தில் இதன் அளவு 9.2 ஆகவும் கியூபெக் மாகாணத்தில் 18.2 ஆகவும் காணப்படுகின்றது.

ஒன்ராறியோவின் தொழில் சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் (Occupational Health and Safety act) தொழிலாளர்களுக்கான பூரண உரிமைகளையும், நலன்களையும் வழங்குகின்றது. இந்தச் சட்டத்தின் மூலம் தொழிற்சாலை உரிமையாளர்கள், தொழில் வழங்குநர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்றோருக்கான பொறுப்புகளை இது அடையாளப்படுத்தி நிற்கின்றது. இதன் மூலம் அனைவரும் ஒன்று சேர்ந்து திட்டங்களை வகுத்து, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வேலைத்தள சூழலை உருவாக்கிக் கொள்ள முடியும் என நம்பப்படுகின்றது.

வேலைத்தளங்களில் செய்யும் அன்றாட கடமைகளுடன் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் குழுவினர் (Health and Safety team) அல்லது சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதிகள் (Health and Safety Representative) போன்றவர்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது அவசியம். வேலைத்தளங்களில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சனைகள் அடையாளப்படுத்தப்படும்போது அவற்றை சரியான முறையில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். உடனடி நடவடிக்கைகளோ அல்லது அந்தப் பிரச்சனைக்குரிய சரியான தீர்வுத் திட்டங்களையோ நிர்வாகம் முன்வைக்கத் தவறினால் தொழிலாளர்கள் தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்வதற்கான முழு உரிமையும் உள்ளது.

வேலைத்தள அபாயங்கள் மற்றும் சுகாதாரம் பாதிப்படையும்போது என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்து கொள்வதற்கு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் அனுமதியளிக்கின்றது. தொழிலாளர்கள், வேலைத்தள சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கொள்கைகளையும், செயல்முறைகளையும் தவறாமல் பின்பற்றுவதோடு இந்த செயல்முறைகளில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் அவற்றை நிர்வாகத்தினருக்குத் அவசியம் தெரியப்படுத்தல் வேண்டும்.

வேலைத்தளத்தில் விபத்து ஏற்பட்டால் அது தகுந்த முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். வேலைத்தள விபத்துக்கள் இடம்பெற்று, அவை தகுந்த முறையில் கையாளப்படாது விட்டால் அல்லது பாதுகாப்பு விதி முறைகள் தொழில் வழங்குநர்களினால் தட்டிக்கழிக்கப்பட்டால் தொழிலாளர் அமைச்சிடம் முறையீடு செய்யமுடியும்.

வேலைத்தள விபத்து ஏற்படும்போது தொழில்தருநரின் கடமைகள்:
சரியான முதலுதவி - தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலுதவி பயிற்சிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். சம்பவத்தின் போது கொடுக்கப்பட்ட முதலுதவிச் சிகிச்சை பற்றிய விடயங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். உடனடிப் போக்குவரத்துச் சேவை வழங்கப்படுதல் வேண்டும். மூன்று நாட்களுக்குள் WSIBக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். விபத்து நடந்த நாளுக்கான முழுமையான சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு வருவதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குதல் வேண்டும்.

இது போன்ற சட்டங்களும், விதிமுறைகளும் ஒருபுறம் இருக்க, நாம் எம்மை பாதுகாத்துக் கொள்வதில் ஒரு சிறு கணமெனும் தவறுதல் கூடாது. விபத்துக்கள் எந்த வடிவத்திலும் எந்த நேரத்திலும் வரலாம். விழிப்புணர்வுடன் இருந்து விபத்துக்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் நடந்தவைகளை மறத்தல் நலம், ஆனால் அவை எமக்குக் கற்றுத் தந்த பாடங்களை மறத்தல் கூடாது.●



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன்

35

ஜூலை மாதம் முகப்புத்தக உலகு ஒரு பயங்கரமான திருப்பத்தைக் கண்டது. அமெரிக்காவில் கறுப்பினத்தவர் ஒருவர் வெள்ளைப் பொலிஸ் அதிகாரி ஒருவரால் சுடப்பட்டுக் கொலையுண்டார். அந்தக் கொலையானது 'சுடச்சுட' முகப்புத்தக்தின் ஊடாக இறந்தவரின் பெண் சினேகிதியால் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இந்த அதிர்ச்சிச் சம்பவம் உலகின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்ட முறைமை ஊடக உலகையே உறைய வைத்துவிட்டது. இன்னும் சொல்லப்போனால் ஊடக உலகின் தணிக்கை விதிகளை முகப்புத்தகம் மாற்றிக் கொண்டிருக்கிறது. இஸ்லாமியத் தீவிரவாதி-கள் தமது கழுத்தறுப்புகளை உலகெங்கும் பரப்ப முகப்புத்தகத்தைப் பயன்படுத்துகிறார்-கள். தற்கொலை செய்பவர்களும் உயிர்போவதை ஒளிபரப்ப முகப்புத்தகத்தை உபயோகித்திருக்கிறார்கள். தணிக்கை விதிகள் மீறப்படுவது குறித்துத்தான் இப்போது ஊடக அவதானிகள் அதிகம் விவாதிக்கிறார்கள். இவை ஒருபுறமிருக்க..

தமிழகத்தின் கிராமப்புறத்து இளம் பெண் ஒருத்தி... அவளை ஒருதலையாகக் காதலித்த ஒருவன் தன் காதலை அவள் ஏற்காததால் அவளது நிர்வாண உருவத்தை கிராபிக்ஸ் மூலம் உருவாக்கி முகப்புத்தகத்தில் பரவ விட்டிருக்கிறான். அதிர்ந்துபோன இளம்பெண்ணும் அவளது குடும்பமும் தமிழகப் பொலிஸிடம் புகார் செய்திருக்கிறார்கள். பல நாட்களாகியும் போலிஸ் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிர்வாணப்படத்தைப் பகிர்ந்த முகப்புத்தகப் பதிவுகளும், இணையப்பக்கமும்கூட முடக்கப்படவில்லை. விளைவு? அந்த கிராமத்து இளம் பெண் தற்கொலை செய்து கொண்டாள். "*காதல் வண் சைற்றா பண்ணினாலும் ரூசைற்றா பண்ணினாலும் கடைசியா சூசைற்தான் பண்ணக்கூடாது*" என்று முகப்புத்தகத்தில் ஆதங்கப்பட்டார் ஒருவர்.

சென்னையில் ஸ்வாதி என்ற பெண் ரெயில்வே ப்ளாட்போர்மில் வைத்து கத்தியால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டதற்கும் முகப்புத்தகத்திற்கும்கூடத் தொடர்பு உண்டு. ஆம். ஸ்வாதியைக் கொலை செய்தவர் முகப்புத்தகத்தூடகத்தான் ஸ்வாதிக்கு முதலில் அறிமுகமானாராம். ஸ்வாதியின் கொலையானது பட்டப்பகலில் பொதுமக்கள் முன்னிலையில் ஒரு ரெயில்வே ப்ளாட்போர்மில் நடந்தபோதும் அதைத் தடுக்கவோ உரிய நடவடிக்கை எடுக்கவோ அருகிலிருந்த யாரும் முன்வரவில்லை. காவலர்களால்கூட முடியவில்லை. இந்தக் கவலை பின்னர் பலரது முகப்புத்தகப்பதிவுகளிலும் இடம்பிடித்துக் கொண்டது. "*கொலையுண்ட பெண்ணை காப்பாத்த யாரும் வரல்ல... ஆனா மதுரையில நடிகை சமந்தா கலந்துகொண்ட நிகழ்ச்சிக்கு ஆயிரக் கணக்கான மக்கள் குவிந்து தள்ளு முள்ளு... காவல்துறை தடியடி...*" என்று ஒருவர் தன் பதிவில் அலுத்துக் கொண்டார். "*பொது இடத்தில கொலையெல்லாம் பண்ணலாம்.. ஆனா சிகரெட் பிடிக்க முடியாது.. என்ன நாடுடா இது.. கருமம்.*" என்று அலுத்துக் கொண்டார் இன்னொருவர். கொலைச் சம்பவத்தின்பின், "*குற்றத்தை தடுக்காதவர்களும் குற்றவாளிகள்தான்*" என்று சொல்லி தமிழக காங்கிரஸ் நடிகை குஷ்பு அறிக்கைவிட்டு ஆவேசப்பட அதற்கு "*தத்தான் இனப்படுகொலை வி'யத்தில் திமுக, காங்கிரஸ பார்த்து நாங்களும் சொல்றோம்..*" என்று காங்கிரஸ் கட்சிக்கு அடித்தார் ஒருவர்.

கபாலி திரைப்படமும் சென்ற மாதம் பலருடைய முகப்புத்தக பதிவகளில் பெருமிடம் எடுத்துக் கொண்டது. பட வெளியீட்டுத்தேதி குறிக்கப்பட்டதிலிருந்து ரொறன்ரோவில் கபாலி படத்தை திரையிட சினிப்ளெக்ஸ் நிறவனம் மறுத்தது, உலகின் பல இடங்களில் படத்தின் டிக்கட்டுகள் கள்ள மார்க்கட்டில் விற்கப்படுவது, படத்தை இணையத்தில் திருட்டுத்தனமாகத் திரையிடவிடாமல் தமிழகத்தில் சைபர் கிரைம் அதிகாரிகள் தடுத்தது, திருட்டுத்தனமாக திரைப்படங்களை பதிவேற்றும் 200 இணையத்தளங்கள் முடக்கப்பட்டது என பல விடயங்கள் முகப்புத்தக விமர்சன விவாதங்களைக் கிளப்பிக் கொண்டிருந்தன. அதனால் இரண்டு கபாலி பதிவுகளைத் தருகிறேன். (1) கபாலி திரைப்படத்தை எடுத்தவர் ஒரு தலித் என்பதால் அது பார்க்கப்படவேண்டிய படம் என்று ஒருவர் எழுதிய விமர்சனத்திற்கு "*தலித் எடுத்தா தலித் படம்ன்னா எல்லீஸ் ஆர் டங்கன் எடுத்தது இங்கிலீஷ் படமா..?*" என இன்னொருவர் நகைச்சுவையாகப் பதிலடி கொடுத்திருந்தார். (2) மற்றதோ ஒரு வேதனையான பதிவு. "*ஒரு திரைப்படத்திற்காக 10 இணையதளங்களை ஒரே நாளில் முடக்கும் சைபர் கிரைமைக் கொண்ட நாட்டில், ஒரு பெண்ணின் ஆபாச படம் பதிவேற்றப்பட்ட ஒரு இணைய பக்கத்தை 10 நாளாக முடக்க முடியாமல் அவள் தற்கொலை செய்துகொண்டாள்.*"

யாழ். பல்கலைக்கழகத்தில் கண்டிய நடனம் ஆடிய சிங்கள மாணவர்களுடன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் மோதிக்கொண்டார்கள் அல்லவா. அச்சம்பவத்தில் எடுக்கப்பட்ட வீடியோ முகப்புத்தகத்தில் பலராலும் பகிரப்பட்டுக் கொண்டிருந்தது. மோதல்களிலெல்லாம் ஈடுபடாமல் தமிழ் மாணவர்கள் அடக்கி வாசித்திருக்கவேண்டும் என நம்மவர்களில் பலர் பதிவிட்டுக் கொண்டிருந்தார்கள். '*ஐ ஸப்போர்ட் கன்டியன் டான்ஸ்*" என்று ரொறன்ரோவில் உள்ள கனடியன்ஸ் ஓரிருவர் தங்கள் முகப்புத்தகத்தில் அறைகூவல் விட்டுக் கொண்டும் இருந்தனர். கண்டி நடனப் பாரம்பரிய உடை உடுத்திய ஒரு ஆண் ஒருவரும் பரதநாட்டிய நங்கை ஒருத்தியும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து முத்தமிடுவதுபோன்ற படமும் நல்லிணக்கம் என்ற பெயரில் பலராலும் பகிரப்பட்டுக் கொண்டிருந்தது. கடுப்பாகிய இன்னொருவர் "*அழிக்கப்பட்டவனையும் அழித்தவனையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பதுதான் நடுநிலையாம்..*" என்று வருந்தியிருந்தார்.

யாழ். பல்கலைக்கழக மோதலைக் கண்டித்து என் ரொறன்ரோ நண்பர் ஒருவர் தன் முகப்புத்தகத்தில் "*உரிமைக்காக போராடுவது என்பது வேறு. சிங்கள மக்களின் பாரம்பரிய நடனத்தை ஆடவந்த கலைஞர்களை அடித்து விரட்டுவது என்பது வேறு. இவ்விதமான சம்பவங்கள் மீண்டும் சிங்கள தமிழ் மக்களிடையே இன முரண்பாடுகளை அதிகரிக்க வைக்கும். தமிழர்களுக்கு சிங்கள மக்களோ அவர்களது கலை கலாசாரங்களோ எதிரானவை அல்ல*" என்று குறிப்பிட்டிருந்தார். நான் அவரது கருத்துடன் முரண்பட்டு ஒரு பென்னாம் பெரிய மறுப்பை எழுதியிருந்தேன். அதிலிருந்து ஒரு சிறு பகுதியை மட்டும் கீழே தருகிறேன்.

*"உங்களுடன் முரண்படுகிறேன் நண்பா.... போரால் காயப்பட்டிருக்கும் நம்மவரின் தமிழ் உணர்வை இன்றைய நிலையில் யாரும் சுலபமாக கடந்து சென்று விடக்கூடாது! காயப்பட்டவனுக்கு வலி இருக்கிறது என்றால் "அவனது காயம் இன்னும் ஆறவில்லை" என்பதுதானே பொருள்?! இதை பெரும்பான்மையினர் புரிந்துகொள்ள வேண்டும். யாழ். பல்கலைக்கழக விழாவில் திடீரென தமிழ்-சிங்கள இனஐக்கியத்தைக் கொண்டுவருவதுதான் நமது குறிக்கோள் என்றால் - அது ஏட்டிக்குப் போட்டியாக இருபகுதியும் நடனமாடி ஏற்படக்கூடியது அல்ல! என்னைக் கேட்டால் நீங்கள் விரும்புகின்ற அந்த இனஐக்கியத்தை சிங்கள மாணவிகள் தமிழ்ப்பாட்டிற்கு பரதநாட்டியம் ஆடிக்காட்டுவதில் இருந்து தொடங்கியிருக்கலாம் அல்லது சிங்கள மாணவர் தவில் வாத்தியத்திற்கு நடனமாடுவதிலிருந்து தொடங்கியிருக்கலாம். அதுதான் பெரும்பான்மை சமூகம் சிறுபான்மையிடம் காட்டத் தகுந்த இன ஒற்றுமையாகும்"* எனக் குறிப்பிட்டிருந்தேன் நான். (ஏதோ ஒன்றிரண்டு பேர் மட்டும்தான் அதற்கு லைக் செய்திருந்தார்கள்.)●



இரா. சம்பந்தன்

# இன்று நினைத்தால் இதுவும் தவறுதான்!

சிவனை வழிபடு தெய்வமாகக் கொண்ட இந்து மதத்திலே திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய புராணக்கதை ஒன்று உண்டு. ஒரு முறை திருமாலுக்கும் பிரமனுக்கும் இடையில் தங்களில் யார் பெரியவர் என்ற விவாதம் எழுந்த போது சிவன் சோதி வடிவாக தோன்றி அந்தச் சோதியின் அடியையும் முடியையும் யார் கண்டு பிடிக்கின்றார்களோ அவரே பெரியவர் என்றான்.

உடனே பிரம்மா அன்னப் பறவை வடிவம் தாங்கி முடியைத் தேடிச் செல்ல திருமால் பன்றி வடிவம் எடுத்து நிலத்தை அகழ்ந்து சோதியின் அடியைக் காணச் சென்றார். இருவரும் தம் முயற்சியில் வெற்றி பெறாமலேயே திரும்பினார்கள் என்பது புராணக் கதை.

ஒவ்வொரு தடவையும் பத்துப் பாட்டுகளாகப் பதிகம் பாடிய சம்பந்தர் மறக்காமல் எல்லாப் பதிகத்திலும் ஒன்பதாவது பாட்டாக இந்த அடிமுடி தேடிய கதையைப் பாடுவார். உதாரணம் காட்ட வேண்டும் என்றால் அவரின் மந்திரம் ஆவது நீறு என்ற திருநீற்றுப் பதிகத்தை எடுத்துக் கொண்டால் ஒன்பதாவது பாட்டு மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு என்றும் திருகோணமலைப் பதிகத்தை எடுத்துக் கொண்டால் ஒன்பதாவது பாட்டிலே பெருங்கடல் வண்ணனும் பிரமன் இருவரும் அறியா என்றும் பாடியிருப்பதைக் காட்டலாம்.

சிறுவனான சம்பந்தர் இப்படிப் பாடினார் என்றால் சாத்வீகமே உயிர் மூச்சாகக் கொண்டவரும் திருப்பணிகளையே கடமையாக நினைத்தவரும் எண்பத்தொரு வயதுவரை வாழ்ந்த முதியவருமான நாவுக்கரசர் தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன் என்று பாடினார்.

தன் பதிகங்களிலே இறைவனைத் தன் நண்பன் என்று காட்டிக் கொண்ட சுந்தரர் தனது திருவண்ணாமலைப் பதிகத்திலே காண்டற்கரிய கடவுளாய் நீண்டவன் நாராயணன் நான்முகனுக்கே என்று தானும் அந்த அடிமுடி தேடிய செய்தியை விபரித்துப் பேசுவார்.

மந்திரியாகப் பதவி வகித்த மணிவாசகர் தன் திருவாசக்திலே பல இடங்களில் அடி முடி தேடிய கதையை எடுத்துப் பேசுவார். மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம் என்று திருவெம்பாவையிலும், திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை என்று திருத் தெள்ளோணத்திலும் பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த நாவேறு செல்வியும் நான்மறையும் போயறியா சேவேறு திருவடி என்று திருக்கோத்தும்பியிலும் பாடுவார் அவர்.

இந்த நால்வரையும் இந்து சமயத் தூண்கள் என்று வரலாறு சொல்லும். சமண பௌத்த மதங்களுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடி வெற்றிபெற்று இந்து மதத்தைக் காப்பாற்றிய இவர்கள் இன்றும் இந்து மக்கள் மனங்களிலே வாழ்கின்றார்கள். பிரச்சனை அதுவல்ல.

தங்களைப் போலவே வைணவ மக்களால் வழிபடு தெய்வமாகக் கொண்டாடப்படும் ஒரு கடவுளை அடிமுடி தேடித் தோற்றார் என்று புராணங்கள் சொன்னாலும் நாகரிக நெறி உணர்ந்த அவர்கள் அதைப் பிடித்துக் கொண்டு தங்கள் தேவார திருவாசகங்களில் அது பற்றிப் பேசலாமா என்பது தான் கேள்வி.

தசாவதாரத்திலே வாரக அவதாரம் என்று பன்றி அவதாரம் பற்றி வைணவ நூலான திவ்யப் பிரபந்தம் கூடப் பேசுகின்றதே என்று இவர்கள் சமாதானம் சொல்லலாம். அது நியாயமான வாதம் அல்ல. தங்கள் சொந்தக் கடவுளைப் பற்றி வைணவம் எது வேண்டுமானாலும் பேசட்டும். இன்னொரு சமயம் அது பற்றிப் பேசுவது ஏற்புடையது அல்ல.

வேற்று மதத்தவராக இருந்தாலும் இளங்கோவடிகள் சிவனையும் திருமாலையும் ஏற்றத்தாழ்வு இன்றி தன் இலக்கியம் முழுவதும் பேசுவார். இந்த நாயன்மார்கள் காலத்துக்குப் பின்பு தோன்றியவன் கம்பன். அவன் திருமாலைக் குல தெய்வமாகக் கொண்டிருந்தாலும் எங்கே பிற கடவுளரைப் பற்றிப் பாட வேண்டி வருகின்ற போதும் சிவனை முதலில் சொல்லி மற்றத் தெய்வங்களைப் பின்பு சொல்லும் ஒரு மரபைப் பின்பற்றினான்.

என் அனைய முனிவரும் இமையவரும்
    இடையூறு ஒன்று உடையர் ஆனால்
பல் நகமும் நகு வெள்ளிப் பனி வரையும்
    பால் கடலும் பதும பீடத்து
தன் நகரும் கற்பக நாட்டு அணி நகரும்
    மணி மாட அயோத்தி என்னும்
பொன் நகரும் அல்லாது புகல் உண்டோ?
    இகல் கடந்த புலவு வேலோய்!
(கம்பராமாயணம் - பாலகாண்டம் - கையடைப்படலம்)

இந்தப்பாடலில் கம்பன் இறையுலங்களை வரிசைப்படுத்திக் காட்டுவான். எல்லா மலைகளையும் பார்த்து இகழ்கின்ற வெள்ளிப்பனி மலையான சிவன் உறையும் கைலாசமலை அடுத்து திருமால் உறையும் பாற்கடல் இருக்கும் வைகுண்டம் பின்பு தாமரையை இருப்பிடமாகக் கொண்ட பிரமன் உறையும் சத்திய உலகம் கற்பக தருக்கள் நிறைந்த இந்திரனின் மனோவதி என்று வரிசைப்படுத்தி தன் தெய்வமான திருமாலின் வைகுண்டத்தை இரண்டாவதாக சொன்னான் கம்பன்.

அவன் நினைத்திருந்தால் தனது இலக்கியத்திலே திருமாலை முதலில் சொல்லி சிவனைப் பின்பு சொல்லியிருக்கலாம். அப்படி அவன் செய்யவில்லை. அது மட்டுமல்ல கிடகிந்தா காண்டத்திலே அநுமனைப் புகழும் போது கீழ்ப் படாநின்ற நீக்கி கிளர்படாது ஆகி என்றும் நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோட்படாப் பதமே ஐய! குரங்கு உருக்கொண்டது என்று சிவனின் பெருமை பற்றிப் பேசி அந்தச் சிவனே அநுமனாக வந்து விட்டான் என்று பாராட்டுவான்.

அப்படி ஒரு நாகரீக வரலாறு பின் வந்தவர்களிடம் இருக்கும்போது இந்த நான்கு பேரும் திருமாலின் எத்தனையோ போற்றத்தக்க செயல்கள் இருக்க அடி முடி தேடிய கதையை மட்டும் திரும்பத் திரும்ப பேசியிருக்கிறார்கள். கிறீஸ்தவர்கள் இந்து மக்களைப் புண்படுத்தும் போது மனம் நோகும் நாம் சமயகுரவர்கள் வைணவ மக்களைப் புண்படுத்தியதைப் பக்தியோடு பார்க்கின்றோம். இது தான் உலகம்.●

# ஒன்ராறியோ மிட்லன்ட் மறைசாட்சிகளின் 29வது ஆண்டு திருத்தல வழிபாடு





கனடாவின் முக்கிய தேவாலயங்களில் ஒன்றான கனடிய மறைசாட்சியர்களின் திருத்தலம் இவ்வாண்டு அதன் 90வது அண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. அதேசமயம், கனடாவிலுள்ள கத்தோலிக்க தமிழ் மக்கள் 29வது ஆண்டாகக் கடந்த மாதம் மிட்லன்ட் மறைசாட்சியர்களின் திருத்தலத்துக்கு பயணம் மேற்கொண்டு சிறப்பு வழிபாட்டில் பங்குபற்றினர். ஜுலை 16ம் தகதி நடைபெற்ற இப்பிரார்த்தனையில் இம்முறை சுமார் பதினையாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்குபற்றினர். தமிழீழத்தின் மருதுமடு ஆலயத்தின் மறுவடிவமாகப் பார்க்கப்படும் இங்கு வருடாந்த வழிபாடு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இங்கு, தாயகத்தில் விடுதலைக்கு வித்தானவர்களுக்கும், இயற்கை இடர்களினால் இறந்தவர்களுக்கும் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் ஒரு நினைவுச் சின்னம் மெழுகுவர்த்தி ஒளிபாய்ச்சுவது போன்று எழுப்பப்பட்டுள்ளது. யாழ். ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும், மட்டுநகர் ஆயர் வண. பொன்னையா அவர்களும் இவ்வருட நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.●








# றொப் ஃபோர்டின் மருமகன் மைக்கல் இடைத்தேர்தலில் பெருவெற்றி



கடந்த மார்ச் மாதம் காலமான ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் றொப் ஃபோர்டின் வெற்றிடத்துக்கு கடந்த மாதம் 25ம் திகதி நடைபெற்ற இடைத்தேர்தலில் அவரது மருமகன் (சகோதரியின் மகன்) மைக்கல் ஃபோர்ட் (22 வயது) அமோக வாக்குகள் பெற்று, ரொறன்ரோவின் 2ம் வட்டாரமான எற்றோபிக்கோ வடக்கின் உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார்.

தம்முடன் போட்டியிட்ட பதினொரு வேட்பாளர்களைத் தோற்கடித்த மைக்கல் ஃபோர்ட், 69.5 வீத வாக்குகளை (6,354 வாக்குகள்) பெற்றார்.

இவருக்கு அடுத்த இடத்தில் வந்த ஜெப் கான்னிங் 20.5 வீத வாக்குகளை (1,918 வாக்குகள்) மட்டுமே பெற்றிருந்தார். 2014ம் ஆண்டு ரொறன்ரோ கல்விச் சபை உறுப்பினராகத் தெரிவான மைக்கல், இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அப்பதவியை ராஜிநாமாச் செய்திருந்தார். றொப் ஃபோர்டின் தந்தையாரான சீனியர் டக் ஃபோர்ட் எற்றேபிக்கோவின் மாகாணசபை உறுபபினராக 1990களில் பதவி வகித்தவர்.

அதன் பின்னர் றொப் ஃபோர்டின் தமையனாரான ஜுனியர் றொப் ஃபோட் 2ம் வட்டார நகரசபை உறுப்பினராக பதவி வகித்தார். அவ்வேளையில் றொப் ஃபோர்ட் ரொறன்ரோ நகர மேயராகத் தெரிவாகியிருந்தார்.

“எற்றோபிக்கோ பிரதேசம் எப்போதும் போர்ட் குடும்பத்துக்கு அரசியல் விசுவாசமானது என்பதை 22 வயதான மைக்கல் ஃபோர்டின் அமோக வெற்றி எடுத்துக் காட்டியிருக்கிறது” என்ற கனடாவின் பிரபல ஊடகங்கள் பலவும் சுட்டியுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம் உதயம்
# சமூக பண்பாட்டுச் சீரழிவைத் தடுத்து நிறுத்தும் முயற்சி








போருக்குப் பின்னர் தமிழ்ச் சமூகத்தில் தீவிரமாகியுள்ள பண்பாட்டுச் சீரழிவைத் தடுத்து நிறுத்தி அதன் ஊடாக பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி ஆழுமைமிக்க தமிழ்ச் சமூகத்தை உருவாக்கும் முயற்சியாக யாழ்ப்பாணத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம் கடந்த மாதம் 19ம் திகதி ஆரம்பித்து-வைக்கப்பட்டது. கந்தர்மடம் பழம்வீதியில், யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. சிதம்பரநாதன் தலைமையில் நேர்த்தியாக வேயப்பட்ட ஓலைக் கொட்டிலில் நிறைந்த பார்வையா-ளர்கள் மத்தியில் கருத்தாடலுடன் வைபவம் ஆரம்பமானது. சுவையான ஆடிக்கூழ் அனைவருக்கும் பரிமாறப்பட்டது. சமகாலச் சீரழிவுகளை நையாண்டி செய்யும் வகையில் சிறுவர்கள் வழங்கிய வில்லுப்பாட்டு பார்வையாளரைக் கவர்ந்தது. பேராசிரியர் சி. மௌனகுரு குழுவினரின் 'மட்டக்களப்பு கூத்துச் செய்முறை விளக்கம்' சிறப்பு நிகழ்சசியாக அமைந்தது. தொடர்ந்து சக்தியைப் பகிரும் ஆற்றுகை நிகழ்வான 'உயிர்ப்பைத் தேடி' உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.●






# ஸ்காபரோவில் மாரிசன் கவிதை நூல் வெளியீடு










தாயகத்தில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. சவரிமுத்து அவர்கள் மாரிசன் என்ற பெயரில் ஐம்பது ஆண்டுகளாக எழுதிய உன்னதமான கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீடு கடந்த மாதம் ஸ்காபரோவில் நடைபெற்றது. பேராசிரியர் ஏ. ஜே. சந்திரகாந்தன் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றனார். உலகத் தமிழர் பத்திரிகை ஆசிரியர் ந. கமலவாசன், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர் அருட்திரு பொன்னாட் அடிகள் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். திரு. பொன்னையா விவேகானந்தன், பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. இராசநாயகம் உட்படப் பலர் உரையாற்றினர்.


# ஐஸ்வரியா சந்துருவின் 'நாட்டிய தர்ப்பணம்'
# ஓர் உன்னதமான கலை மாலைப்பொழுது





கனடாவின் பிரபல நடன ஆசிரியரும் கனடா கலைமன்ற அதிபருமான நிறைஞ்சனா சந்துரு அவர்களின் புதல்வியும் மாணவியுமான செல்வி ஐஸ்வரியா சந்துருவின் தனிநடன நிகழ்ச்சியான 'நாட்டிய தர்ப்பணம்' கடந்த மாதம் 16ம் திகதி ரொறன்ரோவின் தோர்ண்ஹில்லில் அமைந்துள்ள 'சிற்றி பிளேய் தியேட்டர்' அரங்கில் நடைபெற்றது. கலாமன்ற அதிபர் நிறைஞ்சனா சந்துரு அவர்கள் தாயகத்தில் கல்வி கற்ற யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நுண்கலைகளைக் கற்பதில் தடைகளைச் சந்திக்கும் மாணவருக்கு நிதிவசதி வழங்கும் நோக்குடன் இந்நிகழ்ச்சியை ஐஸ்வரியா சந்துரு வழங்கினார். வேம்படி மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், தமிழர் தகவலின் மூத்த எழுத்தாளருமான திருமதி. கனகேஸ்வரி நடராஜா இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிச் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான அணிசேர் கலைஞர்களாக சாயிபிருந்தா & அபிநயா சந்துரு (வாய்ப்பாட்டு), கலாநிதி அபிராம் சகாதேவன் (மிருதங்கம்), அஸ்வின் பிரேமகுமார் (வயலின்), ஹரிசன் மோகனராஜா (புல்லாங்குழல்) பங்குபற்றினர். கலாமன்ற அதிபர் திருமதி நிறைஞ்சனா சந்துருவின் நட்டுவாங்கத்திலும் நெறியாழ்கையிலும் 'நாட்டிய சமர்ப்பணம்' நிகழ்ந்தேறியது. சுதர்ஷன் துரையப்பா தமக்கே யுரிய தனித்துவப் பாணியில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தார்.●







# கனடா நேயம் பவுண்டேஷனின் நிதிசேர் இரவு

## Canada Neyam Foundation - Critical Needs 2016













பிரதம விருந்தினர்
யாழ் ஆயர் மேதகு வண.
ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர தேவைகளைக் கவனிக்கவெனக் கனடாவில் உருவான 'நேயம் பவுண்டேஷன்' அமைப்பின் நிதிசேர் இரவு நிகழ்ச்சி கடந்த மாதம் 23ம் திகதி ஸ்காபரோவில் நடைபெற்றது. யாழ் ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் இந்நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்புரை வழங்கினார். தாயகத்தில் இன்று நிலவும் விரும்பத்தகாத சூழலை விபரித்த இவர், அங்கு வேலையற்றிருக்கும் இளையோருக்கு வேலை வழங்கும் திட்டமொன்றைக் கனடிய உறவுகள் நடைமுறைப்படுத்தினால், வழிதவறிச் செல்பவர்களை நற்பாதைக்குக் கொண்டுவர முடியுமென்று தமதுரையில் ஆயர் தெரிவித்தார். பேராசிரியர் ஏ. ஜே. சந்திரகாந்தன் அடிகள் யாழ். ஆயரை அறிமுகம் செய்து உரையாற்றினார். சிவசிறீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சிகளை திரு. குயின்ரஸ் துரைசிங்கம் தொகுத்து வழங்கினார். திருமதி மார்கி வின்சன்ற் டி. போல் நேயம் அமைப்பின் சார்பில் அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார். கனடியத் தமிழ் இளையோரின் பன்முகத் திறமைகளை வெளிக்கொணரும் கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன.●














NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
Looking for a Career change?
Freedom, Flexibility and
Unlimited income potential
Give us a Call today
Chandran Rasalingam CHS
President & CEO
Dir: 416 909 0400
INFORCE LIFe
Financial Services Inc.
Bus: 416 321 6000 x400
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Like us on Facebook
printfast.ca


RE/MAX
Ace Realty Inc., Brokerage
Each Office Independently Owned and Operated
3-1286 Kennedy Road
Toronto, ON M1P 2L5
Bus: 416-270-1111
Cell: 416-801-3219
Email: skbales@hotmail.com
Web: www.skbales.com
S.K. BALES, CRA, MVA, FRI, CRES.
Broker & Canadian Residential Appraiser
CHAI
Canadian Home Appraisal Inc.
14 Clementine Sq.
Toronto, ON Canada M1G 2V7
www.chainc.ca
Bus: 416-438-2200
e-mail: skbales@hotmail.com

MMUCC

# Markham McNicoll Urgent Care Centre

416.609.3333 www.mmucc.ca

2901 Markham Road, Unit #11, Scarborough, ON. M1X 0B6

## மருத்துவ சேவைகள்

- வெளி நோயாளர் பிரிவு ( Walk in Clinic )
- விரைவு மருத்துவம் ( Urgent Care )
- குடும்ப மருத்துவம்
  (Family Practice)
- ஆய்வு கூட வசதி
  (Lab Services for our Patients only)

## எமது மருத்துவ நடுவத்திலுள்ள பிற மருத்துவ சேவைகள்

- மருந்தகம் ( Pharmacy)
- இயன் மருத்துவம்
  ( Chiropractic, Massage Therapy
  & Physiotherapy) )
- பல் மருத்துவ சேவை (Dental Clinic)
- கண் மருத்துவ சேவை (Optometry)
- மற்றும் பிற மருத்துவ சேவைகள்
  (Many more Medical Services)





* ஆண்டின் 365 நாட்களும் திறந்திருக்கும்

Developed and Managed by :

MEDCENTRE CONNECT

SYNCHRONIZING HEALTH SECTORS



# Markham McNicoll Family Clinic

**416.292.6666**

2901 Markham Road, Unit # 7 , Scarborough, ON. M1X 0B6

MMFC

FAMILY CARE

குடும்ப மருத்துவர்கள்

டாக்டர் சுகந்தி இரவீந்திரன் B.Sc, MD, ABFM

டாக்டர் சிந்துலா விஜயா MD, CCFP

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவர்

திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை

மருத்துவ நிலையம் திறந்திருக்கும்

Developed and Managed by :

MEDCENTRE CONNECT

SYNCHRONIZING HEALTH SECTORS




மார்க்கம் மக்நிக்கல் சந்திப்பில் அமைந்துள்ளது.


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது

# பேரறிஞர் முருகவே பரமநாதன் காலமானார்



இலங்கையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவரான பிரபல எழுத்தாளர் முருகவே பரமநாதன் ஜூலை 31 ம் திகதி கனடாவில் காலமானார். பல ஆய்வு நூல்களின் ஆசிரியரான இவர், 'தமிழர் தகவலின்' நீண்டகால எழுத்தாளர். அத்துடன், 2005ம் ஆண்டு அரிய தமிழ்ப் பணிக்காக 'தமிழர் தகவல்' விருதுடன் தங்கப் பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டவர்.

# அமெரிக்க ஜனநாயக கட்சியின் முதலாவது பெண் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்ரன்



இந்த வருட நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளின்ரன் தெரிவாகியுள்ளார். இப்பதவிக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் முதலாவது பெண் வேட்பாளர் இவரே. இவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவாரானால், அமெரிக்காவின் முதலாவது பெண் ஜனாதிபதி என்னும் பெருமைக்குரியவராவார். முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனின் மனைவியான ஹிலாரி, தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் முதலாந் தவணை ஆட்சியின்போது ராஜாங்க செயலாளர் பதவியை வகித்தவர். வரும் தேர்தலில் இவரை எதிர்த்து குடியரசுக் கட்சியின் சார்பில் கோடீஸ்வர வர்த்தகரான டொனால்ட் ட்ரம் போட்டியிடுகிறார்.



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# வானிலை எதிர்வு கூறல்

ஒரு நாட்டின் வானிலைத் தரவுகளை முற்கூட்டியே பெற்றால்தான் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும். தமிழக வானிலை பற்றி முன்னொரு தடவை வானொலியில் கூறப்பட்டது இன்றும் ஞாபகத்திலுள்ளது. ஷஇன்று மழை வரலாம், வராமலும் போகலாம்' என்பதே அதுவாகும். ஆனந்தவிகடன் சஞ்சிகையில் முன்னர் படித்த நகைச்சுவை ஒன்றும் இப்போது ஞாபகம் வருகிறது. வானொலி அறிவிப்பாளர் "இன்று மழை பெய்யலாம்" என்று கூறுவதைக் கேட்ட வீட்டுக்காரர் எடுத்த குடையை திருப்பி வைத்துவிட்டு, எங்கள் வானொலி எல்லாவற்றையும் மாறித்தான் சொல்வார்கள். இன்று நல்ல வெயில்தான் எறிக்கும் என்றவாறு வெளியே செல்கிறார்.

கனடாவில் வெளியிடப்படும் வானிலைத் தரவுகள் பெரும்பாலும் சரியாகவே அமையும். மிகவும் நவீன ராடர் கருவிகளும், சற்றலைற்றுகளும் மிகவும் துல்லியமாக வானிலையைத் தரவல்லவை. கனடாவின் சுற்றாடல் திணைக்களம் என்பதே இவற்றைக் கணித்துக் கூறும் பொறுப்பான நிறுவனம். ஒவ்வொரு மணிநேர எதிர்வு கூறல், உள்ளூர் வானிலை, நாடளாவிய வானிலை என்று பல முறைகளில் இவை வழங்கப்படுகின்றன. அனேகமாக சகல தொலைக்காட்சிச் சேவைகளிலும் வானிலை அறிவிப்பு 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக ஒளிபரப்பாகும்.

வானிலைத் தரவை உற்றுநோக்கினால் அது பல விபரங்களை சுருக்கமாக தருவதை உணரலாம். உதாரணமாக சனல் 24ஐ எடுத்துக் கொள்ளலாம். வரப்போகும் ஆபத்தான வானிலையை முதலில் செய்தியாகத் தருவார்கள். கடுமையான வெப்பம் ஏற்படும்பொழுது வெப்பத்தாக்க எச்சரிக்கை என்ற பெயரில் அறிவிப்பு வெளிவரும். ஒரு வாரத்துக்குரிய வானிலைத் தரவு, பதினான்கு நாட்களுக்குரிய வானிலைத் தரவு என்று பலவகையில் அறிவிப்புகளை வெளியிடுவார்கள். வெப்பநிலை (Temperature), படிவு வீழ்ச்சி (Percipitation), காற்று (wind), ஈரப்பதன் (Humidity) என்பவை இந்த அறிவிப்புகளூடாக விபரிக்கப்படும். மணித்தியாலத்துக்கு ஒருதடவை வானிலை மாற்றம் முழுவதையும் இவர்கள் அறிவிப்பர்.

மாரி காலம் வந்துவிட்டால் மிகவும் சிக்கலாக இது மாறும். வெப்பநிலை 0வுக்குக் குறைவாகும். இதனை மைனஸ் என்பார்கள். வெப்பகாலத்தில் 0வுக்கு மேலாகச் செல்லும் பொழுது பிளஸ் என்பார்கள். பனிக்காலத்தில் குளிர்நிலை 30க்கும் அதிகமாகச் சென்றுவிடும். இந்தவேளையில் பனிபடு நிலை, பனி மழை, பனித்தூறல், மேகமூட்டம் என பல்வெறு பெயர்களில் வானிலை அறிவிப்பு இடம்பெறும். சில இடங்களில் பனி ஆறு ஓடும். பனிச்சறுக்கல் விளையாட்டும் இடம்பெறும். பனிக்காலத்தில் பலவி - தமான உளநோய்களும் சிலருக்கு ஏற்படும். இன்புளுவென்சா எனும் சளிச்சுரம் காலநிலை மாற்றங்களின் பொழுது ஏற்படும் பொதுவான ஒரு நோய். தசை நோவு, சைனஸ், இருமல் என்பவை பலரையும் வாட்டி எடுத்துவிடும்.

காலநிலை மாற்றம் சிலவேளைகளில் எம்மை படாதபாடுபடுத்திவிடும்.●



## நீத்தார் பெருமை

# சரஸ்வதி பாக்கியராசா

### ஈழத்து இசைக் குயில்

ஈழத்தின் பெருமதிப்புக்குரிய இசைக் கலைஞராக திகழ்ந்த திருமதி சரஸ்வதி பாக்கியராசா லண்டனில் கடந்த மாதம் காலமானார். இசையுலகின் மும்மூர்த்திகளாக எம். எஸ். சுப்புலக்ஷ்மி, டி. கே. பட்டம்மாள், எம். எல். வசந்தகுமாரி ஆகியோர் புகழ்பெறுகையில், யாழ்ப்பாணத்தில் அப்படி அழைக்கவல்ல ஒரு சிறப்பை ஒரு காலத்தில் பெற்றவர்கள் நாகேஸ்வரி பிரம்மானந்தா, சரஸ்வதி பாக்கியராசா, சத்தியபாமா இராஜலிங்கம் ஆகியோர்.

கொக்குவில்லைச் சேர்ந்தவரான சரஸ்வதி பாக்கியராசா சிங்கப்பூரில் பிறந்து, அங்கேயே தனது இசைப் பயணத்தை ஆரம்பித்தவர். சென்னை, மத்திய கர்நாடக இசைக் கல்லூரியின் 'சங்கீதவித்வானா'க, யாழ்ப்பாணத்தில் கர்நாடக சங்கீதத்தை ஒரு 'கௌரவமான அந்தஸ்துடன்', மக்கள் மத்தியில் பரவலாக பரிச்சயமாக்கிய ஒரு சிறப்பு சரஸ்வதி பாக்கியராசாவுக்கு உண்டு.

முசிரி சுப்பிரமணிய ஐயர், முடிகொண்டான் வெங்கடராம ஐயர், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி போன்ற இசை மேதைகளிடம் பெற்ற சிட்சை, அவருக்கு அந்த மனோ வலிமையை அளித்தது. திருவிழாக் காலங்களில் கோவில்களில் தவில், நாதஸ்வர கச்சேரிகளும், சதுர்க் கச்சேரிகளும் இடம்பெற்றவேளையில், வயலின், மிருதங்க பக்கவாத்தியங்களுடன் இவரது இசைக் கச்சேரியும் அங்கு இடம்பெற ஆரம்பித்தமை ஒரு திருப்பமான நிகழ்வு. சம்பிரதாய உருப்படிகளுடன், மெல்லிசையில் சில பக்திப்பாடல்களையும் சேர்த்துக்கொண்டபோது மக்கள் விரும்பி, காத்திருந்து ரசித்தார்கள். "பழநி என்னும் ஊரிலே, பழநி என்னும் பேரிலே, பவனி வந்தான் தேரிலே, பலனும் தந்தான் நேரிலே" என்று அவர் பாடுவதைக் கேட்பதற்கென்றே பலர் ஆவலாக இருந்தார்கள். ஓர் இரவில், பல இடங்களில், பல கோவில்களில் பாடியிருக்கிறார். நல்லூர் தேர் உற்சவத்தில் தேர் இருப்புக்கு வந்ததும் என். கே. பத்மநாதனின் நாதஸ்வரமும், தீர்த்தோற்சவ தினத்தில், முருகன் தீர்த்தமாட வருவதற்கு முன்னதாக தீர்த்தக் கேணி மண்டபத்தில் சரஸ்வதி பாக்கியராசா பாடுவதும், ஒரு சம்பிரதாயமாக பல ஆண்டுகள் தொடர்ந்தது.

யாழ்ப்பாணத்தில், நடனத்துக்கும் பாடினார் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் பிரசித்தத்தைப் பெற்று விளங்கிய சுப்பையா மாஸ்டரின் நிகழ்ச்சிகளில் பாடினார். யாழ்ப்பாணத்து இசை விழாக்களில் பலகாலமாகவே சிறப்பைப்பெற்றார். இசை கற்பித்தலிலும் சரஸ்வதி பாக்கியராசா தனித்த ஓர் இடத்தைப் பெறுகிறார். மருதனாமடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் மகாராஜபுரம் சந்தானம் போன்றவர்களையடுத்து, ஐயாக்கண்ணு தேசிகருக்குப் பின்னர் இவர் இசைத் துறைத் தலைவியாக இருந்தவேளையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி இணைக்கப்பட்டது.

சிங்கப்பூர் இந்தியன் பைன் ஆட்ஸிலும் பல ஆண்டுகள் பணியாற்றி, பின்னர் லண்டன் வந்தார். அவரது இசை அநுபவமும் கற்பித்தல் அநுபவமும், லண்டனில் துளிர்க்க ஆரம்பித்த இசை வளர்ச்சிக்கு பெரும் போ'ாக்குச் சேர்த்தது. 'எண்ணற்ற' என்றில்லாமல், எண்ணும் வகையிலான சிலரை, லண்டனில், இசைத் துறையில் சம்பிரதாய மரபோடு, செவ்வனே உருவாக்கியிருக்கிறார். புகழ்பெற்ற இசைக் கலைஞர்களான 'பம்பாய் சகோதரிகள்' சரோஜா, லலிதா, கர்நாடக இசைக் கல்லூரியில் இவரோடு உடன் கற்ற உற்ற சிநேகிதிகள்.

ஏழாலையைச் சேர்ந்தவரான தந்தையார் எம். வி. சரவணமுத்து, சிங்கப்பூரில் புகையிரத நிலைய அதிபராக பணியாற்றினார். கலை ஆர்வம் மிக்க இவர், தனது பிள்ளைகளையும் அத்துறையில் ஊக்கத்துடன் ஈடுபடுத்தினார். 7 வயதிலேயே, சுபாஸ் சந்திரபோசின் விடுதலை இயக்க கூட்டங்களில் சிறுமி சரஸ்வதி எழுச்சிப் பாடல்களைப் பாட ஆரம்பித்தார். சிங்கப்பூரில், இந்தியாவிலிருந்து வந்திருந்த குமாரசுவாமி என்பவரிடம் இசையைப் பயில ஆரம்பித்து, பின்னர் ஓதுவார் இராமலிங்கம் என்பவரிடம் முறைப்படி இசைபயின்ற இவரது இரங்கேற்றம் 12ஆவது வயதில் சிங்கப்பூர் விக்டோரியா மண்டபத்தில் நடைபெற்றது. இக்காலத்தில் ஹிந்துஸ்தானி இசையையும் ஓரளவு கற்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில் இவரது குடும்பமும் சஞ்சலங்களுக்குள்ளானது. சிங்கப்பூரில் வாழ்ந்த இலங்கையர்கள் சிலர் கப்பலில் இலங்கை திரும்பினார்கள். யுத்த காலத்தில் புறப்பட்ட முதலாவது கப்பல் பத்திரமாக இலங்கை வந்தடைந்ததையடுத்து, இரண்டாவது கப்பலில் இவரது குடும்பமும் இலங்கைக்கு புறப்பட்டது. தாயார் நித்தியானந்தத்தின் ஊரான கொக்குவிலில் குடியேறினார்கள். எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பெயரும் இசையும் ஏற்படுத்திய உந்துதலில், தன்னுடையதும் மனைவியுடையதும் பெயரைக்குறித்து, 'எஸ். என். சரஸ்வதி' என்று, தன்னுடைய மகளை யாழ்ப்பாணத்து இசை அரங்கில் புதிதாக அறிமுகப்படுத்தினார் தந்தை சரவணமுத்து. இவருடைய சகோதரி பரமேஸ்வரி, மேடைகளில் இவருடன் இணைந்து மிருதங்கம் வாசித்தார்.

பின்னர், புதல்விகள் இருவரினதும் இசை மேம்பாட்டுக்காக தஞ்சாவூரில் சிறிதுகாலம் வாழ்ந்து, சிலரிடம் சிறிதுகால குருகுலவாசத்துக்கும் தந்தை வாய்ப்பை அளித்தார். கொக்குவில் இந்துக்கல்லூரியில் அதிபர் நாகலிங்கம் எஸ். என். சரஸ்வதியை இசை ஆசிரியையாக்கிக்கொண்டார். இக்காலத்திலேயே, கர்நாடக இசைக் கல்லூரி சென்று, இலங்கையின் முதலாவது 'சங்கீத வித்வானாக' சரஸ்வதி பாக்கியராசா திரும்பினார். 'எஸ். என். சரஸ்வதி'யின் காந்தர்வ இசை, இசை உலகில், பின்னர் அவரை 'சரஸ்வதி பாக்கியராசா' என்று மேன்மை பெறவைத்தது.

கணவர் பாக்கியராசா இவரின் இசை வாழ்வில் பேருந்துதலாக இருந்தார். யாழ்ப்பாணத்து தவமுனிவர் யோகர் சுவாமிகளோடும், பின்னாளில், சத்ய சாயி பாபாவிடத்தும் பத்திமை பூண்டிருந்தார். திருமதி சரஸ்வதி பாக்கியராசாவுக்கு வயது 90.
(நன்றி: நாழிகை, லண்டன்)

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB




உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5


கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்
5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419
சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்
இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் $ 2.00/ M அறுகம் புல் $ 3.00/bag
உள்ளூர் கார்னேஷன் சரம் $ 2.00/M வில்வம் இலை $ 3.00/bag
மல்லிகைப்பூச்சரம் $ 5.00/M வேப்பிலை $ 3.00/bag
கார்னேஷன் மலர்கள் $ 0.20 each Marukhalundu /Maru $ 3.00 /bag
மல்லிகை மலர்கள் $ 5.00/bag மாவிலை 10 per $ 1.00
சம்பாகினி மலர்கள் $ 3.00 /bag வெற்றிலை 10 per $ 1.00
அரலி மலர்கள் $ 3.00 /bag வாழை இலை $ 1.00 each
தாமரை மலர்கள் $ 1.00 each துளசி இலை $ 3.00/bag
Fancy Florist

# பிரான்ஸ் வீழ்ந்தது போர்த்துக்கல் சாம்பியன்



எஸ். கணேஷ்

## யூரோ 2016

15_வது ஐரோப்பிய கோப்பை (யூரோ) கால்பந்து போட்டி பிரான்ஸ் நாட்டில் ஒரு மாத காலமாக நடந்தது. 24 அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டியில் மகுடம் யாருக்கு என்பதை நிர்ண-யிக்கும் இறுதிப்போட்டி பாரிசில் உள்ள ஸ்டேட் டி பிரான்ஸ் ஸ்டேடியத்தில் கடந்த மாதம் 10ம் திகதி நடந்தது. இதில் உலக தர வரிசையில் 8வது இடத்தில் இருக்கும் போர்த்துக்கல் அணி, 17வது இடத்தில் உள்ள பிரான்ஸ் அணியை எதிர்கொண்டது.

1984, 2000ம் ஆண்டுகளில் சாம்பியனான பிரான்ஸ் அணியை சொந்த மண்ணில் வீழ்த்துவது எளிதான காரியம் கிடையாது என்பதாலும், 1975ம் ஆண்டுக்குப் பிறகு பிரான்சை, போர்த்துக்கல் அணி வென்றது இல்லை என்பதாலும் பிரான்ஸ் அணி 3வது முறையாக கோப்பையை வெல்லும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

பிரான்ஸ் அணியினர் அதிக முறை போர்ச்சுகல் அணியின் கோல் எல்லையை நோக்கி பந்துடன் படையெடுத்தாலும் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. போர்த்துக்கல் அணியின் தடுப்பு அரணையும், கோல் கீப்பர் ருய் பாட்ரிசியோவின் அபார தடுப்பையும் தகர்க்க முடியவில்லை. இரு அணியினரும் பல நல்ல தருணங்களை கோல் கம்பத்துக்கு வெளியில் அடித்து வீணடிக்கின்றனர். போர்த்துக்கல் அணி 1-0 என பிரான்சை வீழ்த்தி முதன்முறையாக கிண்ணம் வென்று வரலாறு படைத்தது.

இந்தப் போட்டியில் கூடுதல் நேரத்தில்தான் போர்த்துக்கலுக்கு இந்த வெற்றி கிட்டியது. இதன் மூலம் ஐரோப்பிய கால்பந்து வரலாற்றில் ஒரே தொடரில் மூன்று ஆட்டங்களில் கூடுதல் நேரத்தில் வெற்றி கண்ட அணி என்ற பெரு-மையும் போர்த்துக்கலுக்கு கிடைத்திருக்கிறது. முன்னதாக 2வது சுற்றில் குரோஷியாவையும், காலிறுதியில் போலந்தையும் எதிர்த்து ஆடிய ஆட்டம் கூடுதல் நேரத்திற்கு சென்றது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ் அணியிடம் தொடர்ச்சியாக 10 ஆட்டங்களில் தோல்வியைத்




தழுவியிருந்த போர்த்துக்கல் அணி, அந்த தோல்விப்பயணத்துக்கு ஒரு வழியாக முற்றுப்புள்ளி வைத்துள்ளது. மேலும், பிரான்ஸ் அணி, போர்த்துக்கலிடம் தோல்வி அடைவது கடந்த 41 ஆண்டுகளில் இதுவே முதன்முறையாகும்.

தனது முதலாவது மகுடத்தை சூடுவதற்காக போர்த்துக்கல் அணி 35 ஆட்டங்களில் விளையாடி இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ கடைசியாக பங்கேற்ற 15 போட்டிகளில் (கிளப், தேசிய அணி) ஒன்றில் கூட தோற்கவில்லை. மேலும், இறுதிப் போட்டியில் தோற்றது மிகவும் ஏமாற்றமாக இருந்தது என்று குறிப்பிட்ட பிரான்சின் கிரீஸ்மன் தங்க ஷூ வென்றார். அதேவேளை வெற்றிக் கிண்ணத்தை முத்தமிட்ட போர்த்துக்கல் அணித்தலைவர் ரொனால்டோவுக்கு வெள்ளி ஷூ கிடைத்தது.

ஐரோப்பிய ‘சாம்பியன்கள்’

| | | | |
|---|---|---|---|
| 1960 | சோவியத் யூனியன் | 1992 | டென்மார்க் |
| 1964 | ஸ்பெயின் | 1996 | ஜெர்மனி |
| 1968 | இத்தாலி | 2000 | பிரான்ஸ் |
| 1972 | மேற்கு ஜெர்மனி | 2004 | கிரீஸ் |
| 1976 | செக்கோஸ்லோவக்கியா | 2008 | ஸ்பெயின் |
| 1980 | மேற்கு ஜெர்மனி | 2012 | ஸ்பெயின் |
| 1984 | பிரான்ஸ் | 2016 | போர்ச்சுகல்.● |
| 1988 | நெதர்லாந்து | | |



ONTARIO NDP

## உங்கள் தெரிவு

இருபதாண்டுகளுக்கு மேலாக சமூக, கலாசார, மற்றும் அரசியல் பணிகளில் எங்களுடன் பயணிப்பவர்.

- ஐந்தாண்டு காலம் (மார்க்கம் மற்றும் ஸ்காபரோ பகுதிகளில்) கல்விச்சபை உறுப்பினராக (Public School Board Trustee) அனுபவம் பெற்றவர்.
- BSc (Hons.), B.Ed, M.Ed ஆகிய மூன்று பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்ற பட்டதாரி. கல்வித் துறையில் பல ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தவர்.
- கொள்கைத் தெளிவு, கடின உழைப்பு, விடா முயற்சி, பாரிய சவால்களைத் துணிவுடன் சந்திக்கும் திறன் போன்றவற்றிற்கு முன்னுதாரணமாக விளங்குபவர்.
- பல ஆண்டுகளாக ஸ்காபரோ ரூஜ் றிவர் பகுதியில் தொழிலாற்றுவதுடன், அப்பகுதியிலேயே தனது மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வருபவர்.
- எங்களின் நம்பிக்கையைப் பெற்று அரசியலில் பல மட்டங்களில் எங்களுக்காகக் குரல் கொடுத்து வருபவர்.

எதிர்வரும் ஸ்காபரோ ரூஜ் றிவர் (Scarborough Rouge River) மாகாண சபைக்கான இடைத்தேர்தலில் ஒன்ராரியோ புதிய சனநாயகக் கட்சி (Ontario NDP) வேட்பாளராகப் போட்டியிடும் நீதனுக்கு முன்பு போலவே தொடர்ந்தும் எங்கள் ஆதரவை வழங்கி இம்முறையும் அவரை வெற்றியடையச் செய்வோம்.



# நீதன் சண்முகராஜா (சண்)

# A Fighter for Scarborough

R & S AUTO SALES
Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825




எஸ். காந்தி

# கனடாவில் வதிவிடங்களில் பெறுமதி அதிகரிப்பு

வதிவிடங்கள் என்கின்ற சொற்பதம் வீடு மற்றும் தொடர்மாடிக் கட்டிடங்களை குறித்து நிற்கின்றது. இவற்றில் முக்கியமாக ரொறன்ரோ, வன்கூவர் போன்ற நகரங்களிலும் அதனைச் சூழவுள்ள உப நகரங்களிலும் வீடுகள் மற்றும் தொடர்மாடி கட்டிடங்களின் விலைகள் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவுக்கு அதன் பெறுமதி அதிகரித்து செல்வது எல்லோரும் அறிந்த விடயம். இதற்கான காரணங்கள் பலவாக இருப்பதாக பொருளியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முதலாவதாக கூறப்படும் காரணம் தொடர்ச்சியாக நீண்ட காலமாக கனடிய வட்டி விகிதம் மிகவும் குறைந்த விலையில் இருப்பதாகும். செல்வந்தர்களுக்கு வட்டியைப்போல் சிறந்த நண்பன் வேறு ஒருவரும் இருக்க முடியாது. காரணம் அது 24 மணிநேரமும் அவர்களுக்காக உழைத்துக் கொண்டேயிருக்கும் எனக் கூறுவார்கள். இப்படியான வட்டி வீதம் குறைவாக இருப்பது கடன்களின் தொகை அதிகமாக இருந்தாலும் அறுதிக்கடன் (Mortgage Payment) திருப்பி செலுத்துவதற்கு வசதியாக உள்ளது முக்கியமான காரணமாக அமைகின்றது.

இத்தோடு இணைந்ததாக காணப்படும் காரணமாகக் கூறக்கூடியது சில சமூகக் குழுக்களின் பண்பாட்டு விழுமியங்கள் ஆகும். குறிப்பாக கூட்டுக் குடும்ப அடிப்படையில் இரத்த உறவுகள் எல்லோரும் சேர்ந்து ஒரு வீட்டை வாங்கி அதற்கான அறுதிக்கடன் முடியும் தறுவாயில் அதனை விற்று அதில் வரும் இலாபத்தினை பகிர்ந்து அதன் பின்னர் தனித்தனியாக ஒவ்வொருவரும் வீடு வாங்கும் முறைமை சீக்கிய சமூகத்தினராலும் சீன சமூகத்தினராலும் சிறப்பாக பின்பற்றப்படுகின்றது. தமிழ்ச் சமூகத்தில் இதன் விகிதாசாரம் மிகவும் குறைவானதே. இதனால்தான் சீக்கிய சமூகத்தினர் பிரம்ரன் பகுதியில் சில தேர்தல் தொகுதியில் எல்லாக் கட்சியிலும் அவர்களே தேர்தலில் போட்டியிட முடிகின்றது.

கேள்வி நிரப்பல் தத்துவத்தின் (Demand and supply theory) அடிப்படையில் பார்க்கும் போது கனடா வருடாவருடம் 200,000 தொடக்கம் 300,000 வரையில் புதிய குடிவரவாளர்களை உள்வாங்கிக் கொள்கின்றது. இவற்றில் பெரும்பாலானவர்கள் ஒன்ராறியோவில் குறிப்பாக ரொறன்ரோ பகுதியில் வந்து குடியேறுவதால் வதிவிடங்களுக்கான தேவை அதிகரிக்கின்றது. அது மாத்திரமல்ல சமீபத்தில் 25,000 சிரிய அகதிகளை ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாடும் வதிவிடங்களுக்கான தேவையை அதிகரிக்கின்றது. இத்துடன் சேர்த்து வெளிநாட்டு மாணவர்களுக்கான வதிவிடத் தேவையும் இருக்கின்றது.

மேற்சொல்லப்பட்ட காரணத்தினால்தான் தற்பொழுது ரொறன்ரோ நகரத்தில் மூலை முடக்கு எங்கும் தொடர்மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதன் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. வீடுகளின் பெறுமதி கற்பனைக்கு எட்டாத வேகத்தில் அதிகரித்துள்ளது. வதிவிடங்களின் விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமையும் இன்னொரு விடயம் வெளிநாட்டவர்களின் முதலீடு ஆடம்பரமான வீடு மற்றும் ஆடம்பர வசதி கொண்ட தொடர்மாடிகளை நோக்கி வருவதாகும்.குறிப்பாக சீனாவில் இருந்துவரும் முதலீடுகள் ரொறொன்ரோ வான்கூவர் பகுதியை நோக்கி வருவதாக சொல்லப்படுகின்றது. கடந்த வருடத்தினை விட இந்த வருடம் மேலும் அதிகரித்துள்ளதாம். இதனை விட மற்றும் ஹொங்கொங், மத்திய கிழக்கு, தெற்காசிய நாடுகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

இவர்களை இங்கு இந்த முதலீட்டில் ஈர்க்கும் விடயங்களாக அமைவது கனடிய நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி. 18 மாதங்களுக்கு முன்பு இருந்த விலையுடன் ஒப்பிடும் போது இதனை அறியமுடியும். இரண்டாவதாக வட்டி வீதக்குறைவு, மற்றும் கனடா உலகத்தில் சிறந்த வாழ்க்கை தரத்தை உடைய நாடாக இருப்பது. கனேடிய மத்திய வங்கியின் சிறந்த நிதி நிர்வாக கொள்கைகள், வரிக்கொள்கையில் இவர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் இல்லாது இருப்பது போன்ற காரணங்களை கூறமுடியும்.இவற்றுக்கும் மேலாக கடந்த யூன் மாதத்தில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் தீர்மானம் எடுத்ததால் பல பிரித்தானிய முதலீட்டாளர்களின் கவனம் கனடாவின் பக்கம் திரும்பியுள்ளதால் கடந்த சில வாரங்களுக்குள் ரொறன்ரோ பகுதியில் வீடுகளின் விலைகள் மேலும் அதிகரித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

கடந்த நான்கு ஐந்து வருடங்களாக பல பொருளாதார வல்லுனர்கள் இப்படியான விலை ஏற்றம் கடுமையான விலை வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் என்றும் இந்த துறை ஒரு பலூன் போல் ஊதியுள்ளது. எப்போது வெடிக்கும் என்று தெரியாது என்கின்ற எச்சரிக்கை கூறிக் கொண்டிருக்கையில் வீடுகளின் விலைகள் அதிகரித்து செல்கின்றன. தத்துவமும் நடைமுறையும் முரண்பட்டு நிற்கின்றன.●


NKS Draperies & Blinds
210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420
• Vertical blinds
• Venetian blinds
• Draperies
• Curtains
• Shutters
உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட
அழையுங்கள்
கேதா
தமது சிறப்பான சேவையினால் தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


SABESAN'S Choice
We design and build your dream homes
Additions and Custom build homes
Sabesan's Choice
416 605 1990
உங்கள் வீட்டுக்கான புதிய இணைப்பு புதுப்பித்தல் ஆகிய வேலைகளுக்கு கைதேர்ந்த வேலைப்பாடுகளுடன்...
Custom made
Solid Wood
Kitchen Cabinets
Flooring
Granite counter-tops...
Financing available *OAC



குரு அரவிந்தன்

# அகத்தியர்

தமிழ் எழுத்துகளுக்கு முதல்வன் என்று அகத்திய முனிவரை அழைத்தால் அது மிகையாகாது. காரணம் நாம் அறிந்தவரையில் தமிழ் மொழியின் தொன்மையை அறிவதற்கு அகத்திய முனிவர் விட்டுச் சென்ற ஆவணங்களே எமக்கு உதவியாக இருந்தன. மிகப் பழைய ஆவணங்களில் ஒன்றான தொல்காப்பியத்திலேயே அகத்திய முனிவரைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. எனவே தொல்காப்பியருக்குக் காலத்தால் முந்தியவர் அகத்தியர் என்பதை நாம் எடுத்துக் கொள்ளலாம். இதுவரை எமக்குக் கிடைத்த மிகப் பழைய தமிழ் ஆவணங்களில் அகத்தியமே தொன்மையானதாக இன்று கருதப்படுகின்றது. காலாகாலமாய் அகத்தியரின் உன்னத படைப்புகளைப் பாதுகாத்து வந்த முன்னோருக்கு தமிழ் இனம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

அகத்தியர் குடமுனி, கும்பயோகி என்னும் பெயர்களாலும் அழைக்கப்பட்டார் எனப் பின் வந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படி ஔவையார் என்ற பெயரோடு சிலர் இருந்தார்களோ, அதுபோல அகத்தியர் என்ற பெயரோடும் வெவ்வேறு காலகட்டங்களில் பலர் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கவும் இடமுண்டு. ஆனாலும் காலாகாலமாய்ச் சொல்லப்பட்டு வந்த ஐதிகக் கதைகளின்படி தென் திசை நோக்கி வந்த அகத்தியர் பொதிகை மலையில் தங்கியிருந்து முருகக் கடவுளை வணங்கியதாகவும், அப்போது முருகக் கடவுளின் ஆணைப்படி அகத்தியம் என்னும் அரிய தமிழ் நூலை இயற்றினார் எனவும் நம்பப்படுகின்றது. சிவபூசை செய்வதற்காக கமண்டலத்தில் அகத்தியர் கொண்டு வந்த கங்கை நீரை விநாயகக் கடவுள் காகமாக உருக் கொண்டு சாய்த்துவிட, கமண்டலத்திலிருந்து வழிந்து ஓடிய நீரே காவிரி ஆறாக மாறியதாக ஐதிகக் கதைகள் உண்டு.



தமிழ் மொழியை எமக்கு ஆக்கிப் படைத்தது மட்டுமல்ல, சித்த வைத்தியத்துக்கு அகத்திய முனிவர் செய்த பணியும் அளவிடற்கரியது. பல நோய்களுக்கும் மருத்துவ சந்தேகங்களுக்கும் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாக விளக்கம் கொடுத்துள்ளார். அகத்தியர் பெயரில் வெளியாகியுள்ள 'சமரச நிலை ஞானம்' என்னும் நூலில் உடம்பில் உள்ள முக்கியமான நரம்பு முடிச்சுகள் பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டிருகின்றது. 'அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்' என்னும் நூலில், பதினெட்டு வகையான மனநோய்கள் பற்றியும் அதற்குரிய மருத்துவம் பற்றியும் விளக்கப்பட்டிருக்கின்றன.●

# கனடாவில் தமிழர்களைக் குறிவைத்து நூதன மோசடி! விழிப்புடன் இருக்க காவலர்கள் வேண்டுகோள்

கனடிய மத்திய காவல்துறையிலிருந்து பேசுகின்றோம். உங்களுடைய குடிவரவு விசாரணை சம்பந்தமான ஒரு விண்ணப்பத்தை நீங்கள் கடந்த காலத்தில் பூர்த்தி செய்யவில்லை. இந்த இணைப்பை குடிவரவு அதிகாரிக்கு மாற்றுகின்றேன் என மாற்றப்படுகின்றது. அந்த இணைப்பில் வரும் குடிவரவு அதிகாரியெனப்படுவர் இன்னமும் கடுந்தொணியில் உங்களது குடிவரவின்போது ஒரு விண்ணப்பம் நிரப்பப்படவில்லை எனக் கூறுவதுடன் அவர்களை நம்ப வைப்பதற்காக அவர்கள் பற்றிய தனிப்பட்ட விபரக் கொத்து, விலாசம் என்பவற்றையும் கூறுவார்.

தனது விடயங்கள் சரியாக இருப்பதனால் சஞ்சலமடையும் அப்பாவித் தமிழர் குரல் தளரத் தொடங்க, குடிவரவு அதிகாரியென கதைத்தவர் தான் தொலைபேசியைக் காவல்துறை அதிகாரிக்கு மாற்றுவதாக கூற, மற்றவர் இணைப்பில் வந்து, இந்த விடயத்தை சரி செய்ய முடியும். நீங்கள் அதற்கான தண்டத் தொகையாக செலுத்த வேண்டிய தொகை என்று ஒரு தொகையைக் கூறுவார். அதனை தனிப்பட்ட நிதிநிறுவனங்களினூடாகவோ, அல்லது கடனட்டையூடாகவோ செலுத்த முடியும் என்றும் தெரிவிப்பார். தனது குடிவரவில் பாதிப்பு வரப்போகின்றது என்பதற்காக அந்த தொலைபேசி அழைப்பைப் பெற்ற நபர் உடனடியாக பணத்தைச் செலுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார். பலர் இவ்வாறு செலுத்தியுமிருக்கின்றனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தனியார் நிதிநிறுவன அதிகாரி ஒருவர், இரண்டு தமிழ் முதியவர்கள் இவ்வாறு பணம் செலுத்த வந்த போது அவர்களிடம் குடிவரவுத் திணைக்களம் இவ்வாறு பணம் கேட்காது. நீங்கள் அனுப்புகின்ற பணம் அமெரிக்காவிலுள்ள ஒரு இனந்தெரியாத தனிநபருக்குச் செல்கிறது என்பதை விளக்கித் தான் திருப்பி அனுப்பியதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான மோசடிக்காக வருமான வரித் திணைக்களத்தையும் பயன்படுத்தும் நபர்கள் தாங்கள் வருமான வரித் திணைக்களத்திலிருந்து அழைக்கின்றோம் எனக்கூறி இவ்வாறான பணப்பறிப்பில் ஈடுபடுவதாகவும் அதேபோன்று மின்வாரியத்திலிருந்து அழைக்கின்றோம், உங்கள் நிலுவையை உடனடியாக கடனட்டை மூலம் செலுத்தாவிட்டால் மின் இணைப்பைத் துண்டித்துவிடுவோம் என்கிற பாணியிலான அழைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.●

HERITAGE Education Funds

RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# International Days

These are the international days currently observed by the United Nations. New international days are established regularly.

August
9 - International Day of the World's Indigenous Peoples (A/RES/49/214)
12 - International Youth Day (A/RES/54/120)
19 - World Humanitarian Day (A/RES/63/139)
23 - International Day for the Remembrance of the Slave Trade and Its Abolition [UNESCO] (29 C/Resolution 40)
29 - International Day against Nuclear Tests (A/RES/64/35)
30 - International Day of the Victims of Enforced Disappearances (A/RES/65/209)

September
5 - International Day of Charity (A/RES/67/105)
8 - International Literacy Day [UNESCO] (14 C/Resolution 1.441)
12 - United Nations Day for South-South Cooperation (A/RES/58/220)
15 - International Day of Democracy (A/RES/62/7)
16 - International Day for the Preservation of the Ozone Layer (A/RES/49/114)
21 - International Day of Peace (A/RES/36/67) (A/RES/55/282)
26 - International Day for the Total Elimination of Nuclear Weapons (A/RES/68/32)
27 - World Tourism Day
29 - World Maritime Day (IMCO/C XXXVIII/21)

---

## உருளைக் கிழங்கு...

ஆகியவற்றில் கிட்டத்தட்ட ஒரேயளவு மாப்பொருள் உண்டு.

பழங்களைப் பொறுத்தரையில் அவற்றில் மாப்பொருள் குறைவு. ஒவ்வொரு அப்பிள், ஒரேன்ஜ், பியேர்ஸ், சிறிய வாழைப்பழம் ஆகியவற்றிலும் கிட்டத்தட்ட அதேயளவு மாப்பொருள் உண்டு. எனவேதான் நீரிழிவு உள்ளவர்களை மாப்பொருள் அதிகம் உள்ள உணவுகளைக் குறைத்து காய்கறி பழவகைகளை அதிகம் உண்ணும்படி சிபார்சு செய்யப்படுகிறது. ஆனால் அதேநேரம் மாப்பொருள் உணவுகள் வேண்டாதவை அல்ல. எமது உடலுக்கு அவசியம் என்பதை மறக்கக் கூடாது. ஏனெனில் அவைதான் எமது இயக்கத்துக்கு அவசியமான சக்தியைக் கொடுக்கின்றன. இது நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் பொருந்தும்.

### உண்மையில் உருளைக்கிழங்கு நீரிழிவாளர்களுக்கு ஆகாத உணவா?

நீரிழிவு உள்ளவர்கள் மாப்பொருள் உணவுகளான சோறு, பாண், இடியப்பம், பிட்டு போன்றவற்றை உண்பதைப் போலவே உருளைக்கிழங்கையும் உண்ணலாம். ஆனால் அவற்றின் அளவுகளில் கவனம் எடுக்க வேண்டும். உருளைக்கிழங்கு எமது பிரதான உணவு அல்ல. நாம் அவற்றை பொதுவாக பிரதான உணவுகளான சோறு இடியப்பம் பிட்டு பாண் போன்றவற்றுடன் கறியாக கலந்து உண்கிறோம். எனவே இரண்டையும் அளவு கணக்கின்றி உண்ணக் கூடாது. உருளைக் கிழங்கை அதிகம் எடுத்தால் அதற்கேற்ப பிரதான உணவின் அளவில் சற்றுக் குறைக்க வேண்டும்.

உருளைக் கிழங்கு சோறு இரண்டிலும் நார்ப்பொருள் உள்ள போதும் மேலும் அதிக நார்ப்பொருள் உள்ள காய்கறிகளை சேர்த்து உண்பது நல்லது. குருதியில் சீனியின் அளவு திடீரென அதிகரிப்பதை இது குறைக்கும். கீரை வகைகள், ஏனைய நார்த்தன்மையுள்ள காய்கறிகள் போன்றவை அவ்வாறு சேர்த்து உண்பதற்கு ஏற்றவையாகும் ஆனால் அதற்கு மேல் பயற்று இன வகை உணவுகளான பருப்பு பயறு கௌபீ சோயா கடலை போஞ்சி பயிற்றை போன்றவற்றை சேர்த்து உண்பது மேலாகும்.●



YOUR PARTNER IN
MORTGAGES
Dirresh Krishna, MBA, CMA, AMP
Mortgage Specialist (Lic #M08007487)
Tel: 416.819.4373
accent@rogers.com
Ragavan (Raga) Ramanathan, AMP
Mortgage Specialist (Lic #M13000685)
Tel: 416.579.7533
raga_ram@yahoo.com
316 - 885 Progress Ave., Toronto, Ontario. M1H 3G3
Tel.: 416.439.3333 • Fax: 416.439.3336


A1 COLOMBO PHOTO STUDIO
OCCASIONS - FROM
WEDDING $ 500
FIRST HOLY COMMUNION $ 250
BIRTHDAY $ 250
GRADUATION $ 250
ARANGETRAM $ 250
BAPTISM $ 250
Professional Photography & Video
All Types of video & Photographic Work
DIGITAL, FULL HD DVD, BLUE RAY DISC, FULL HD,SD,4K
Custom Framing & Wood Plaque Lamination
5 MINUTES SERVICES PRICE
2- PASSPORT OR CITIZEN $ 10
2- P-R-CARD OR I.D PHOTOS $ 10
25- STUDIO PORTRAITS $ 25
25- OUTDOOR PORTRAITS $ 50
(Color - B&W - Sepia)
And All Other Occasions...
CALL TO MAKE APPOINTMENT 24 HOURS & 7 DAYS A WEEK TP: 416-613 2818
E-mail: a1colombo649@gmail.com Web: www.tamilsyellowpages.com
t - /a1colombophoto f - /a1colombo - 2296 EGLINTON AVE EAST@BIRCHMOUNT RD
UNIT 3 LOWER LEVEL SCARBOROUGH TORONTO ONTARIO - CANADA - M1K 2M2


அர்ச்சனாஸ் & கோ
அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்
பூஜைப்பொருட்கள்
மல்லிகைச்சரம்
பூக்கள் பூமாலைகள்
பரதநாட்டிய ஆபரணங்கள்
வீடியோ புகைப்படம்
திரைப்படங்கள் பாடல்கள்
All temple pooja items
Fresh jasmine and flower garlands
Dance items
HD Video & Photography
Passport photos
"உங்கள் இல்லம்தோறும் இறையருள் பெற"
416-292-0033 www.archanas.ca
2950 Kennedy Rd. Unit 6, Scarborough (One Block North of Finch)


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின் 331 குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
ரொறன்ரோவின் முன்னணிப் பாடகர்களுடன்
தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர், M.L.R. கார்த்திகேயனின்
5வது ஆண்டு
இன்னிசை விருந்தும்
கிராமத்து விருந்தும்
SEPTEMBER
03
6:00 PM
THE PRINCESS BANQUET HALL
3330 Pharmacy Ave
(Pharmacy & McNicoll)
அன்பளிப்பு:
$100
M. L. R. Karthikeyan


வீடு வாங்க... விற்க... உங்கள் பிரதிநிதி
Rave P. Raveenthiran
Sales Representative
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Dir: 416-567-2462
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
ATTIC INSULATION
கோடை காலத்தில் குளிராக்கும் செலவினை குறைக்கவும்
குளிர் காலத்தில் வெப்பமாக்கும் செலவினை குறைக்கவும்
கூரை உக்குதல், பூஞ்சணம் பிடித்தல் போன்றவற்றை தடுக்கவும்
பரண் (ATTIC) உள்ளீடு செய்திடுங்கள்!!!
Stay Warm in Winter. Be Cool in Summer.
Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space
SuPa. Raveenthiran
416-847-7171
ENERecon Insulation


DR. ILLANGO & ASSOCIATES
ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT
Dental Office
BRACE FOR A GREAT SMILE
SCARBOROUGH
Kennedy / Finch
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
Tel: 416-292-7004
905-47 BRACE (27223)
BRAMPTON / MISSISSAUGA
Steeles / Hurontario
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
Tel: 905-457-1700
MARKHAM
Markham / 16th
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
905-47 BRACE (27223)

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes

## Successful Real Estate Office With Over 425 Salespeople

TOP 4 HOMELIFE OFFICE IN CANADA 2015
TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2014
TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2013
TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012
TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011
TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

- No Franchise Fees
- No Monthly Fees
- No Desk Fees

International Award Winning Office
Top 4th HomeLife Office In Canada-2015
Over 2000 Sq.Ft Office Located @ Markham Rd & Steeles Ave E

- Over 425 Salespersons.
- Top 5th Listing Office in Canada
- Weekly Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week Including Holidays



HomeLife /Future Realty Inc., Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101
INDEPENDENTLY OWNED AND OPERATED

Selva Vettyvel
Broker of Record
Tel:416-568-4301

# FOR SALE

## Good size Family Investment Goodwood Rd/ Stonesthrow

- 4 Bedrooms
- 4 Washrooms
- 3 Garages
- 9 Parking Spaces





$1,249,999.99

In ¾ Acre land

The Estate Family House in Uxbridge

Welcome to the Estate of Goodwood. Main Fl 9FT Ceiling, designed, and tastefully decorated. $$$$Spend on upgrades. Kitchen w/Granite counters, Back Splash, Extra Cabinets,Two Fireplaces, Oak Staircase w/Iron pickets, CCTV Cameras, Water Softener, 4 Washrooms w/Granite counter tops, 5PC Ensuite w/glass enclosure, Lots of sunlight, Triple Garage, Please view Virtual Tour.

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க.. அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்



2015 Rookie of the Year
2015 Platinum Club Award

கமல் நவரட்ணம்
**Kamal Navaratnam**
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

HomeLife/Future Realty Inc.
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trust and reliable services*